# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2351 - 2023 සැප්තැම්බර් මස 22 වැනි සිකුරාදා - 2023.09.22

*2351 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1930 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1937 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1927-B 82497-5,441 (2023/09)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

*சிங்கள மொழிமூலம் மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி – குருநாகல் மாவட்டம்*

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாக பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாக பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரராகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தானவராகவும் பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, ஐப்பசி மாதம் 23 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யு. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, ஓகத்து 31.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| குருநாகல் | உடுபத்தாவ | கட்டுகம்பள ஹத்பற்று பிரிவின் மேலதிக விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், குருநாகல். |

*09-305*

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி – (தமிழ் மொழி)
அம்பாறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் / தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, ஐப்பசி மாதம் 23 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, ஓகத்து 24.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அம்பாறை | அட்டாளைச்சேனை | அட்டாளைச்சேனை 03 (முஸ்லிம்) பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி (தமிழ் மொழிமூலம்) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அம்பாறை. |
| அம்பாறை | அட்டாளைச்சேனை | நிந்தவூர் பற்று/ மாளிகைக்காடு பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி (தமிழ் மொழிமூலம்) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அம்பாறை. |

09-306

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

சிங்கள மொழி பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – கம்பஹா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரராகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், வயது 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

5. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

வைத்தியசாலையினுள் பிறப்பு, இறப்புக்களினை பதிவு செய்யும் பிறப்பு, இறப்பு பதிவாளர்களினை சேர்த்துக் கொள்ளும் பொழுது விண்ணப்பதாரர் அரசாங்க வைத்தியசாலையில் போதுமான அலுவலக வசதி கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைக்கு 01 கி. மீ. வரையிலான தூரத்தில் பிரிவில் அமைந்துள்ள பொருத்தமான வேறு கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு பதிவு செய்தல் பிரிவுக்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

7. இதற்கு தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

8. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, செத்தெம்பர் 05.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கம்பஹா | நீர்கொழும்பு | நீர்கொழும்பு நகர பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கம்பஹா. |
| கம்பஹா | நீர்கொழும்பு | நீர்கொழும்பு நகர (வைத்தியசாலைக்கு வெளி) பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கம்பஹா. |

09-307

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

*சிங்கள மொழி பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – கேகாலை மாவட்டம்*

*இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரராகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.*

*2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.*

*3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், வயது 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)*

*4. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.*

**கருத்திற் கொள்ளவும்**.– *க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.*

*5. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.*

*வைத்தியசாலையினுள் பிறப்பு, இறப்புக்களினை பதிவு செய்யும் பிறப்பு, இறப்பு பதிவாளர்களினை சேர்த்துக் கொள்ளும் பொழுது விண்ணப்பதாரர் அரசாங்க வைத்தியசாலையில் போதுமான அலுவலக வசதி கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைக்கு 01 கி. மீ. வரையிலான தூரத்தில் பிரிவில் அமைந்துள்ள பொருத்தமான வேறு கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.*

*6. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.*

*7. இதற்கு தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும்* (www.rgd.gov.lk) *பெற்றுக்கொள்ள இயலும்.*

*8. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.*

*டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,*
*பதிவாளர் நாயகம்.*

*பதிவாளர் நாயகம் திணைக்களம்,*
*இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2023, செத்தெம்பர் 04.*

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| கேகாலை | ருவன்வெல்ல | கரவனெல்ல ஆதார வைத்தியசாலை பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர், மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கேகாலை. |

*09-308*

---

நீதிச்சேவை ஆணைக்குழு

**அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் உயர் நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளுதல் - 2023**

1. 2088/ 26 ஆம் இலக்கமுடைய 2018.09.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் உயர் நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்காக தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **சேவை நிபந்தனைகள்.-**

2.1 பகிரங்க சேவையின் நியமனத்தை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2088/ 26 ஆம் இலக்க மற்றும் 2018.09.11 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் தொடர்பிலான பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பிற்கு செய்யப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் செய்யப்படவுள்ள திருத்தங்களுக்கும் தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்படும் "உயர் நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர்" நியமிக்கப்படுவார்.

2.2 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2088/26 ஆம் இலக்க மற்றும் 2018.09.11 ஆந் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் தொடர்பிலான பிரமாணக் குறிப்பில் அரச மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தலுக்கு அமைவாக பிரிவு 12.18 இன் பிரகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள மற்றும்/அல்லது எதிர் காலத்தில் வெளியிடப்படவுள்ள சுற்றுநிருபங்களுக்கு அமைவாக உயர் நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்குரிய மற்றைய அரச மொழி தொடர்பிலான தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

3. **சம்பளம்** : 03/ 2016 மற்றும் அதற்கு அமைவாக நீதிச் சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2016.06.24 ஆந் திகதிய நீதிச்சேவை ஆணைக்குழுவின் 386 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைவாக, அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் உயர் நீதின்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்குரிய SL 1-2016 (மாதாந்தம்) ரூபா 47,615.00 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895.00 (இப்பதவிக்குரிய ஆரம்ப சம்பளம் SL 1-2016 இற்குரிய சம்பள அளவுக்குரிய 12 ஆவது படிநிலையாகும். அதனடிப்படையில் ஆரம்ப சம்பளம் ரூபா 62,595.00) ஆகும்.

4. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குரியது.

5. **தகைமைகள் :**

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

மற்றும்

(ஆ) 2023.09.22 ஆந் திகதிக்கு 30 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

மற்றும்

(இ) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளராக இருத்தல் அல்லது இலங்கை நீதிமன்ற பதிவாளர் சேவையின் தரம் I இல் ஏழு வருடங்கள் உயிர்ப்பான, திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தராக இருத்தல் மற்றும் அப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

அல்லது

(ஈ) 07 வருடங்களுக்கு குறையாமல் செயல் திறமையுடையவாறு தொழிலில் ஈடுபட்டு வருகின்ற சட்டத்தரணியாக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.-

(i) யாதேனும் அமைச்சொன்றில், அரச திணைக்களமொன்றில் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றில் அல்லது அரச சட்ட வாரியமொன்றில் சட்டத்தரணியாக பதவிநிலை உத்தியோகம் ஒன்றில் அல்லது சட்டத் துறை சார் தகைமையில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது சட்டக் கல்லூரியொன்றில் சட்டம் தொடர்பான ஆசிரியராக சேவையாற்றிய காலப்பகுதி செயல் திறமையுடையவாறு தொழிலில் ஈடுபட்டு வருகின்ற காலப்பகுதியாக கருதப்படும்.

(ii) தற்போது பகிரங்க சேவையில், மாகாண அரசாங்க சேவையில் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு உச்ச வய தெல்லை பொருந்தாது.

(iii) அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களின் சேவை பிரமாணத்தின் 13.5 பிரகாரம் "திருப்திகரமான சேவைக் காலம்" என்பது அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்கள் வினைத்திறனுடனும் ஊக்கத்துடனும் பணியாற்றுவதன் மூலமும் சித்தி பெற வேண்டிய வினைத் திறமைகாண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி பெறுவதன் மூலமும், பதவியில் நிரந்தரமாக்கப்படுவதற்கு தேவையான தகைமைகளை பூர்த்தி செய்து கொள்வதன் மூலமும், அக்காலப்பகுதியில் ஈட்டிக்கொள்ள வேண்டிய சகல சம்பளவேற்றங்களையும் பெற்று, தண்டனைக்குரிய குற்றம் எதனையும் புரியாமல் சேவையாற்றும் காலப்பகுதியாகும்.

(உ) சிறந்த நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஊ) பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றப் போதுமான உடல், உள ரீதியிலான தகைமையினை பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய சகல தகைமைகளையும் 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி அல்லது அதற்கு முதல் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

6. அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளுக்கு நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைவாக பதவிக்கு பொருத்தமான ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

7. மேலே 05 (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையினை பூர்த்தி செய்வதினூடாக பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்படும் உத்தியோகத்தர் ஆயின் நியமனம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருட வேலைபார்க்கும் காலத்திற்கு உட்படுவார். 05 (ஈ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்வதினூடாக பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தர் நியமனம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவார்.

8. தமக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்பதற்கு தவறும் அல்லது நியமனம் பெற்ற பதவியில் கடமைகளை பொறுப்பேற்பதனை மறுக்கும் அல்லது புறக்கணிக்கும் விண்ணப்பதாரிகளின் நியமனத்தை செல்லுபடியற்றதாக்குவதற்கான அதிகாரம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கு அமைவாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு உள்ளது.

9. **பொய்யான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை**.-

விண்ணப்பதாரி ஒருவர் முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கருதப்படும் யாதேனுமொரு விடயம் தொடர்பான பிழையான கூற்றினை தெரிவித்துள்ளமை அல்லது உண்மையை மறைத்துள்ளமை தெரிவு செய்யப்பட முன்னர் தெரிய வருமாயின் தகைமையற்றவராக ஆக்கப்படலாம். தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமாயின் சேவையிலிருந்து நீக்கப்படலாம் அல்லது அவரது சேவை முடிவுறுத்தப்படலாம்.

10. **விண்ணப்பிக்கும் முறை**.-

(அ) விண்ணப்பப்படிவ கட்டணம் ரூபா 500.00. "நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர்" பெயரில் மக்கள் வங்கி, டாம் வீதிக் கிளையில் பேணிச் செல்லப்படும் 297 100 199 025 039 கணக்கிற்கு எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பதாரியின் பெயர், முகவரி எழுதப்பட்ட $9 \times 4$ அளவுடைய கடித உறையுடன் பதிவுத்தபாலில் அனுப்புவதினூடாக அல்லது நேரடியாக வந்து ஒப்படைப்பதன் மூலம் விண்ணப்பப்படிவத்தினை பெற்றுக் கொள்ள முடியும். பணம் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டினை பூர்த்தி செய்யும் போது பற்றுச்சீட்டில் உரிய இடத்தில் விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்படல் வேண்டும்.

(ஆ) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2023.10.20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் "செயலாளர், நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலகம், கொழும்பு 12" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்திற்கு விண்ணப்பதாரி நேரடியாக வந்து ஒப்படைக்க முடியும்.

11. (அ) விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையின் அதிபர் ஒருவரினால், சமாதான நீதவான் ஒருவரினால், சத்திய ஆணையாளரினால், சட்டத்தரணி ஒருவரினால், பிரசித்த நொத்தாரிசு

ஒருவரினால், முப்படையின் அதிகாரமுடைய உத்தியோகத்தர் ஒருவரினால், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது பகிரங்க சேவைக்குரிய நிரந்தர பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

(ஆ) தற்போது பகிரங்க சேவையில் ஈடுபட்டுள்ள மேற்குறிப்பிட்ட தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை தங்களது திணைக்களத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) எல்லா விதங்களிலும் முழுமையற்ற விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலிடப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் தொலைந்து போதல் மற்றும் தாமதமாக கிடைக்கப்பெறல் என்பது தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

12. 01 தொடக்கம் 11 வரையில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தியாயம்/ பிரிவுகளில் விளக்கமளிக்கப்படாத விடயங்கள் ஏதும் இருப்பின் அது தொடர்பில் நீதிச் சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கு அமைவாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் தீர்மானிப்பார்.

13. இவ் அறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் முரண்பாடுகள் காணப்படின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கு அமைவாக செயற்படுதல் வேண்டும்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச். எஸ். சோமரத்ன,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
2023, செத்தெம்பர் 13.

09-415

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## திருத்தம்

கல்வி அமைச்சு

**கல்வி அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத (தொகுப்பு 2) I ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான 3 ஆவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை- 2023**

இலக்கம் 2,335 மற்றும் 2023.06.02 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் I ஆம் பகுதி : (II அ) பிரிவில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் (பக்க இலக்கம் 1135) 10 (02) விடயத்தை பின்வருமாறு திருத்துகின்றேன்.

அலுவலக நிர்வாகத்திற்குரிய பிரச்சினையில் எடுக்க வேண்டிய நடவடிக்கையை ஆராய்வதற்கு தயாரிக்கப்பட்ட தேர்வு வினாத்தாளுக்கு பதிலளிக்க வேண்டும்.

எம். என். ரணசிங்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்ல,
2023, ஓகத்து 25.

09-316/1

## திருத்தம்

கல்வி அமைச்சு

**கல்வி அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத (தொகுப்பு 2) II ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான 2 ஆவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை- 2023**

இலக்கம் 2,335 மற்றும் 2023.06.02 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் I ஆம் பகுதி : (II அ) பிரிவில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் (பக்க இலக்கம் 1139) 10 (01) விடயத்தை பின்வருமாறு திருத்துகின்றேன்.

தாபன விதிக்கோவையின் I மற்றும் II தொகுப்பில் காணப்படும் விதிமுறைகள் தொடர்பான அறிவு எதிர்பார்க்கப் படுகின்றது. தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுப்பின் I, II, IV, VII, VIII, XII பிரிவுகள் தொடர்பில் பொதுவான புரிந்துணர்வு மற்றும் தாபன விதிக்கோவையின் II ஆவது தொகுப்பின் XL VII ஆம் அத்தியாயங்கள் தொடர்பில் பொதுவான புரிந்துணர்வு.

எம். என். ரணசிங்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்ல,
2023, ஓகத்து 25.

09-316/2

## கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்

**விளையாட்டு டிப்ளோமா பாடநெறி - 2024/2025**

*கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழ் உள்ள தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தினால் சிங்கள மொழிமூலம் நடாத்தப்படும் விளையாட்டு டிப்ளோமா பாடநெறியினைப் பயிலுவதற்காக வயது 18-35 (அரசாங்க சேவையில் பணியாற்றுவோரின் வயது 45 வருடங்களை விட மேற்படாது இருத்தல் வேண்டும்) வருடங்களுக்கு இடைப்பட்ட தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

1. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்:**

1.1 கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம்/எண்கணிதம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக இரு அமர்வுகளுக்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் அவற்றில் 3 பாடங்களில் திறமைச்சித்திகளைப் பெற்றிருத்தில் வேண்டும்.

மேலும் அவர்,

(அ) ஏற்றுக்கொள்ளப்பட்ட விளையாட்டு அல்லது உடற்கல்வி தொடர்பான கல்லூரி ஒன்றில் ஆகக் குறைந்தது 06 மாத பாடநெறி ஒன்றினை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தியிருத்தல்.

அல்லது

(ஆ) முப்படைகள், பொலிஸ் அல்லது சிவில் பாதுகாப்புப் பிரிவின் பயிற்சி வழங்கும் நிறுவனமொன்றில், கல்லூரியில் விளையாட்டு அல்லது உடற்கல்வி தொடர்பான பாடநெறி ஒன்றினை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தியிருத்தல்.

அல்லது

(இ) பாடசாலை விளையாட்டு ஆசிரியராக அல்லது ஆசிரியையாக அல்லது உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றில் விளையாட்டு நில ஆலோசகராக ஆகக் குறைந்தது 05 வருட அனுபவத்துடன் விளையாட்டுத்துறையில் விசேட ஆற்றல்களை வெளிக்காட்டியிருத்தல்.

அல்லது

(ஈ) யாதேனும் விளையாட்டு தொடர்பாக தேசிய விளையாட்டுக் குழுவொன்றின் அங்கத்தவராக இருக்க வேண்டியதுடன் யாதேனும் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றியிருத்தல்.

அல்லது

(உ) விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்படும் தேசிய விளையாட்டுப் பெருவிழாவின் மாவட்ட மட்டப் போட்டியொன்றில் முதலாம் அல்லது இரண்டாம் இடத்தைப் பெற்றிருத்தல், அவ்வாறு இல்லாவிடின் தேசிய விளையாட்டுச் சங்கமொன்றினால் நடாத்தப்படும் தேசிய மட்டப் போட்டியொன்றில் முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் இடத்தைப் பெற்றிருத்தல்.

2. **விண்ணப்பப்படிவங்களை அனுப்பவேண்டிய முறை:-**

2.1 மேலே குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் ஏனைய தகைமைகளைக் கொண்டிருக்கும் விண்ணப்பதாரிகள் இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் 8" × 13 ½" அளவுடைய கடதாசியில் தயாரிப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை தமது சொந்தக் கையெழுத்தினால் பூர்த்தி செய்து 2023.10.31ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர், தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம், இலக்கம் 100/7, சுதந்திர மாவத்தை, கொழும்பு 07" என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

2.2 விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விளையாட்டு டிப்ளோமாப் பாடநெறி – 2024/2025" தொடர்பான விண்ணப்பப்படிவம் எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

2.3 அரசாங்க, உள்ளூராட்சி சேவை மற்றும் கூட்டுத்தாபனங்களில் பணியாற்றும் அலுவலர்களினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் குறிப்பிட்ட திணைக்களத்தின்/ நிறுவனத்தின் தலைவர்களினூடாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

3. **தேர்ந்தெடுக்கும் முறை:**

இப்பாடநெறி தொடர்பாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களுள் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அனைவரும் எழுத்து மூலப் பரீட்சை ஒன்றுக்கு அழைக்கப்படுவதுடன் ஆட்சேர்ப்புக் குழுவினால் தீர்மானிக்கப்படும் புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கும், உடற் தகைமை காண் செயன்முறைப் பரீட்சை ஒன்றுக்கும் அழைக்கப்பட்டதன் பின்னர் பாடநெறிக்காகத் தெரிவு செய்யப்படுவர்.

4. **பாடநெறி தொடர்பான விபரங்கள் :**

4.1 பாடத்திட்டமானது கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு 05 பிரிவுகளை உள்ளடக்கியதாகும்:-

(அ) பயிற்றுவித்தலின் பொதுக் கோட்பாடுகள்

உடற் தகைமைகள் மற்றும் திறன்கள், நுட்பமுறைகள், உபாய வழிகள், பயிற்சி முறைகள், திட்டமிடல் முறைகள், பயிற்சிச் சுமை மற்றும் பரீட்சித்தல் தொடர்பான கோட்பாடுகள் மற்றும் வாய்மொழி மூலப் பரீட்சை என்பனவற்றை உள்ளடக்கியதாகும்.

(ஆ) ஆகக்குறைந்தது 10 விளையாட்டுக்கள் தொடர்பான கோட்பாட்டு மற்றும் செயன்முறை அறிவு.

(இ) சுவட்டு மற்றும் மைதான மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் பற்றிய நிபுணத்துவம்.

(ஈ) சுவட்டு மைதான மெய்வல்லுநர் விளையாட்டுகளுக்கு மேலதிகமாக விளையாட்டு டிப்ளோமாப் பாடநெறிக்காலத்தின் போது பெண்களின் அல்லது ஆண்களின் பொருட்டு சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான விதத்தில் தெரிவுசெய்து கொள்ளும் ஒரு விளையாட்டு தொடர்பான நிபுணத்துவம்.

(உ) விளையாட்டு உடற் கூற்றியல், விளையாட்டுச் சமூகவியல், விளையாட்டு நிர்வாகம், விளையாட்டுப் புள்ளிவிபரவியல், விளையாட்டு விழாக்களை ஏற்பாடு செய்யும் முறைகள், விளையாட்டு மருத்துவவியல், விளையாட்டு உயிரி இரசாயனவியல், விளையாட்டுப் போசணை மற்றும் விளையாட்டு உளவியல் போன்ற பொது விடயங்கள் தொடர்பான அறிவு.

4.2 பாடநெறியின் கால எல்லை 12 மாதங்களாகும்.

4.3 இப்பாடநெறியின் பொருட்டு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களால் ரூபா 60,000.00 ஐ பாடநெறிக்கான கட்டணமாக பாடநெறியானது ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டியதுடன் பாடநெறிக்கான கட்டணத்தினை செலுத்தி நிறைவு செய்த விண்ணப்பதாரர்கள் மாத்திரம் பாடநெறி தொடர்பாக சேர்த்துக் கொள்ளப்படுவர். அவ்வாறே இப்பணமானது காசோலையாக செலுத்தப்படுமாயின் "செயலாளர், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சகம், உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பிரிவு" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். மேற்படி பணமானது எக்காரணங்கொண்டும் மீள அளிக்கப்பட மாட்டாது.

4.4 பாடநெறியினைப் பயிலுவதற்குத் தெரிவு செய்யப்படுவோர் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் சட்டதிட்டங்களையும் பிரமாணங்களையும் கடைப்பிடிப்பதற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

4.5 பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்பவர்களுக்கு "விளையாட்டு டிப்ளோமா" சான்றிதழ் வழங்கப்படும்.

5. **ஏனைய நிபந்தனைகள்:**

5.1 பாடநெறியின் முடிவில் தொழில் ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு இவ் அமைச்சு பணிக்கப்படவில்லை.

5.2 இருப்பினும் பாடநெறியினைப் பயில்பவர்கள் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் பணிப்பாளருடன் உடன்படிக்கை ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டுமென இவ் அமைச்சு கருதும் பட்சத்தில் அவ்வுடன்படிக்கைக்கு உடன்படுவதற்கு பாடநெறியைப் பயிலுபவர்கள் கட்டுப்படல் வேண்டும்.

5.3 தற்போதுள்ள உயர் தகைமையினை அல்லது கோரப்பட்டுள்ள தகைமையினை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட வேண்டியதுடன் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படாத தரவுகள் பின்னர் முன்வைக்கப்படினும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

5.4 இங்கு குறிப்பிடப்படாத வேறு விடயங்கள் இருக்குமாயின் அவைதொடர்பாக தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனப் பணிப்பாளரின் அபிப்பிராயத்தின் பேரில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பணிப்பாளர்,
தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்.

இல. 100/7, சுதந்திர மாவத்தை,
கொழும்பு 7,
2023, செத்தெம்பர் 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொலைத்தொடர்பு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டு அமைச்சு**

**விளையாட்டு டிப்ளோமா பாடநெறி -2024/2025**

**தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்**

1. i. முழுப்பெயர் (திரு./திருமதி/செல்வி) : ........................................................................................................

ii. முதலெழுத்துக்களுடன் பெயர்: ..................................................................................................................

iii. முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்):

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |

iv. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்:-

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

2. முகவரி: i. சொந்த : ..................................................................................................................
ii. தொழில் : ..................................................................................................................

தொலைபேசி இலக்கம் (சொந்த): .......................................... தொலைபேசி இலக்கம் (தொழில்): ..........................................

3. i. பிறந்த திகதி :- ஆண்டு : ...................................., மாதம் :......................................., திகதி : ......................................

ii. 2023.10.31 ஆந் திகதியன்று வயது: வருடங்கள் : ..................................., மாதங்கள்: ................., நாட்கள்: ...............

4. இலங்கைப் பிரசையா ? இல்லையா ? என்ற விபரம்: .....................................................................................

இலங்கைப் பிரசையாயின், பதிவின் மூலமா ? அல்லது பரம்பரையினாலா ? என்ற விபரம்: .......................................................
..................................................................................................................................................................

5. i. ஆண்/பெண்: ..........................................

ii. திருமணமானவர்/திருமணமாகாதவர்: ..........................................

6. நீங்கள் தொழில் செய்பவரா ? இல்லையா ? என்ற விபரம்: ...........................................

i. பதவி: ..........................................

ii. சேவைக் காலம்: ..........................................

iii. சேவை நிலையம்: ..........................................

7. i. கல்வித் தகைமைகள் : கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை

வருடம் : ………………….………

பரீட்சைக் சுட்டெண் : ……………..……

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

ii. கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தரப் பரீட்சை

வருடம் : …………….………………

பரீட்சைச் சுட்டெண் : ……………….………………

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |

iii. வேறு கல்வித் தகைமைகள் (உயர் பரீட்சைகள்/பட்டம்)

வருடம் : …………..………………

பரீட்சைச் சுட்டெண் : …………..………………

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |

8. விளையாட்டுத் திறமைகள் (பெற்றுள்ள உயர் விளையாட்டுச் சான்றிதழ்கள் மற்றும் விசேட ஆற்றுகைகள் பற்றி இங்கு குறிப்பிடவும், சகல சான்றிதழ்களினதும் நிழற் பிரதிகளை இணைத்து அனுப்பவும்)

1. பாடசாலைகளுக்கிடையேயான தேசிய மட்ட 16 வயதிற்கு மேற்பட்ட அடைவுகள் : ……….…………………….…..
……………………………………………………………………………………………………………

2. தேசிய விளையாட்டுப் பெருவிழா அடைவுகள் மாவட்ட/மாகாண/தேசிய : ……….…………...…………………....
……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………

3. தேசிய சங்கங்களின் மூலம் நடாத்தப்படும் தேசிய மட்டப் போட்டிகளின் அடைவுகள் : ………………………...…
……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………

4. சர்வதேச போட்டிகள் தொடர்பான பங்குபற்றுதல்கள் : …………………………………………………........
……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………

9. i. வர்த்தமானி அறிவித்தலின் 1.1 பந்தியில் உள்ளவாறு எந்தப் பிரிவின் கீழ் விண்ணப்பிக்கின்றீர் என்பதனைக் குறிப்பிடுக.

| அ | ஆ | இ | ஈ | உ |
|---|---|---|---|---|
| | | | | |

ii. மேலே குறிப்பிடப்பட்டுள்ள அப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ளவாறு பெற்றுள்ள தகைமைகள் தொடர்பான விபரங்கள்:

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

10. வேறு விடயங்கள்:

……………………………………………………………………………………………………......

……………………………………………………………………………………………........…………

11. இந்தப் பாடநெறிக்குத் தெரிவு செய்யப்பட்டால் பாடநெறிக் கட்டணமான ரூபா 60,000.00 ஐ செலுத்துவதற்கு நீங்கள் தயாரா என்பது பற்றிய விபரம்: …………………………………………..

இங்கு மேலே என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும், சரியானவை எனவும், நான் உறுதிமொழிகின்றேன், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையற்றது என யாதேனும் விதத்தில் கண்டுபிடிக்கப் படும் பட்சத்தில் இப்பாடநெறியைக் கற்பதற்கு தகுதியற்றவராவதுடன் பயிற்சிப் பாடநெறியில் இருந்து நீக்கப்படுவேன் என்பதை நான் அறிவேன்.

…………………………………………..
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : …………………

அரசாங்க, உள்ளூராட்சி மற்றும் கூட்டுத்தாபன சேவையில் ஈடுபட்டுள்ளோருக்கு மட்டும்

பணிப்பாளர்,
தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்,

இவ் …………………………… இல் …………………………… ஆகக் கடமையாற்றும் திரு./ திருமதி/ செல்வி ……………………………….. அவர்களது விண்ணப்பப்படிவத்தைச் சிபாரிசு செய்து சமர்ப்பிப்பதுடன், இவ்விண்ணப்பதாரர் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிக்காகத் தெரிவு செய்யப்பட்டால் பாடநெறி நடைபெறும் காலத்திற்கு அவரை பணியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………..………………………..
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.
பதவி முத்திரை.

திகதி: …………………

பெயர்: ………………………………..
பதவி: ………………………………..

09-332

**கல்வி அமைச்சு**

திறன்கள் அபிவிருத்தி, தொழிற் கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவு

**தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்**

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சார்) வகுதி - 03 சேவைத் தொகையில் செய்து காட்டுநர் (தரம் III) பதவிக்காக (மட்டுப்படுத்தப்பட்ட) ஆட்சேர்ப்புச் செய்தல் - 2023

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தில் காணப்படுகின்ற செய்து காட்டுநர் பதவிக்காக பின்வரும் துறைகளில் உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்த தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் ஆரம்பத் தேர்ச்சி பெற்ற சேவைத் தொகைக்கு (PL-3-2016) ஏற்புடைய பதவிகளிலுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| துறை |
|---|
| உலோக வேலை நிபுணத்துவம் |
| மோட்டார் இயந்திர நிபுணத்துவம் |
| மின்னியல் நிபுணத்துவம் |
| கட்டட நிர்மாண நிபுணத்துவம் |
| அலுமினியப் பொருள் உருவமைத்தல் |

01. **ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் முறை :**

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவினால் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சையொன்றுக்குத் தோற்ற வேண்டியுள்ளதோடு, எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளிடையே திறமை அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெறுபவர்களில் இருந்து, நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இரு மடங்கு விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் எழுத்துப் பரீட்சை என்பவற்றில் பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, திறமை அடிப்படையில், நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமான தொகையினர் இணைத்துக் கொள்ளப்படுவர். இலக்கம் 6 இல் குறிப்பிடப்பட்ட விடயப் பரப்பின் கீழ் விண்ணப்பிக்கின்ற துறைக்கு ஏற்பான அறிவைப் பரீட்சிக்கின்ற வினாத்தாள் ஒன்றிற்கும் பொது அறிவு மற்றும் மதிநுட்பத்தைப் பரீட்சிக்கின்ற வினாத்தாள் ஒன்றிற்கும் சகல விண்ணப்பதாரிகளும் தோற்ற வேண்டும். இலக்கம் 7 இல் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கேற்ப கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

02. **தேவையான தகைமைகள்:**

***கல்வி மற்றும் தொழில் தகைமைகள்:***

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் பதவிக்குப் பொருத்தமான துறையில் தேசிய தொழில் தகைமை (NVQ) 5 ஆம் மட்டத்தின் சம்பந்தப்பட்ட பாடப் பகுதியில் ஒரு பாநெறியை தொடர்ந்து சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் பதவிக்குப் பொருத்தமான (N.V.Q.) 4 ஆம் மட்டத்தின் தேசிய தொழிற் கல்வி நுட்பப் பாடநெறியில் சான்றிதழுடன் பதிவு செய்து மற்றும் தொழில் முறை தகைமைகளைப் பெற்ற பிறகு தொடர்புடைய துறையில் (05) ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிப்பட்ட ஒரு நிறுவனமொன்றின் மூலம் மரவேலை அல்லது உலோக வேலைத் தேர்ச்சி அல்லது மோட்டார் இயந்திரத் தேர்ச்சி/ மின்னியல் நிபுணத்துவம் அல்லது கட்டட நிர்மாணத் தேர்ச்சி, தொடர்பாக மூன்று வருட காலம் அல்லது அதற்கு அதிகமான கால பாடநெறி அல்லது அலுமினியப் பொருள் உருவமைத்தல் துறையில் ஓராண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாடநெறி ஒன்றைப் பூர்த்தி செய்த சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

I. **சேவை அனுபவம் :**

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் ஆரம்பத் தேர்ச்சி பெற்ற சேவைத் தொகைக்கு உரித்தான (PL-03-2016) பதவி ஒன்றில் நிரந்தர நியமனம் பெற்று 7 வருட கால செயற்படு நிலையிலான திருப்திகரமான சேவைக்காலத்தை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

II. **உடல் ரீதியான தகைமை :**

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் சேவையாற்றக் கூடிய வகையிலும் பதவியின் கடமைகளை நிறைவேற்றக்கூடிய வகையிலும் போதியளவான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

III. **வேறு :**

விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்ற இறுதித் திகதிக்கு இப்பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான தகைமைகள் அனைத்தையும் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்து காணப்படல் வேண்டும்.

03. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானது ஓய்வூதிய உரித்துடையது. தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேர்ச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள்/ அநாதைகள், தபுரதாரர்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்துக்காலம் விதிக்கப்படும் வகையில் தாங்கள் அது தொடர்பாக பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) நியமனமானது 1 வருட வேலை பார்த்தல் காலத்திற்கு உட்பட்டது. செய்துகாட்டுநர் III ஆம் தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டு 3 வருட காலத்தினுள் ஆட்சேர்ப்புத் திட்ட விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதற்கு இயைபான சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப தற்போது வகிக்கின்ற பதவியில் உரிய தேர்ச்சியைப் பெற்றிருந்தாலும் இந்தப் பதவிக்கு உரித்தான ஏனைய அரச கரும மொழி தொடர்பாக குறித்த தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் ஏனைய ஒழுங்கு விதிகளுக்கும் இந்த நியமனமானது கட்டுப்பட்டுள்ளது.

04. **வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரிகள் 25 வயதுக்குக் குறையாமல் இருப்பதோடு, உச்ச வயதெல்லை கிடையாது.

05. **சம்பள அளவு :**

2016.02.25 ஆந் திகதி கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016 இல் MTI - 2016 சம்பளக் குறியீட்டின் கீழ் இப்பதவிக்காக ரூபா 29,840 - 10 × 300 - 11 × 350 - 10 × 560 - 10 × 660 - ரூபா 48,890.00 வான மாதாந்த சம்பள அளவு உரித்தாகும். அச்சுற்றறிக்கையின் II ஆவது உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

06. **எழுத்துப் பரீட்சைக்கான விடயப் பரப்பு** :

| தொடர் இலக்கம் | வினாப் பத்திரத்தின் பெயர் | விடயப் பரப்பு | நேரம் | அதி கூடிய புள்ளித் தொகை | சித்தி யடைய வேண்டிய புள்ளித் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | பொது அறிவு மற்றும் மதிநுட் பத்தைப் பரீட்சித்தல் | சமகால நடைமுறை விடயங்கள், சமூக நிகழ்வுகள் தொடர்பான கிரகித்தல் மற்றும் சர்வதேச நிகழ்வுகள் தொடர் பான அறிவு மற்றும் ஆக்கபூர்வமான சிந்தனா சக்தி, பிரச்சினைகள் தீர்க் கின்ற ஆற்றல் மற்றும், பகுப்பாய்வு செய்வதற்கான திறமை என்பவற்றைப் பரீட்சிப்பதற்கான சுருக்க வினாத்தாள் ஆகும். | 01 மணித்தி யாலம் | 100% | 40% |
| 2 | உலோக வேலை நிபுணத்துவம் | பொறியியல் விஞ்ஞானம், தொலைத் தொடர்பு ஆற்றல், தொழில்நுட்ப வரைவு, ஒட்டும் பொறிமுறைத் தேர்ச்சி (கோட்பாடு), உருக்கி இணைக்கும் வேலை | 02 மணித்தி யாலம் | 100% | 40% |
| 3 | மின்னியல் நிபுணத்துவம் | மின்சார இயந்திரங்கள், மின் வலு மற்றும் தன்னியக்க கட்டுப்பாட்டுத் தொகுதி, நுண்ணியல்சார் செய லாக்கத் தொகுதி, பிரயோக மின் அளவீடு, மின் கம்பியிழுத்தல். | 02 மணித்தி யாலம் | 100% | 40% |
| 4 | கட்டட நிர்மாண நிபுணத்துவம் | கட்டட நிர்மாணம் மற்றும் பராமரிப்பு, கட்டுமான அளவீடு, நீர் சுத்திகரிப்பு மற்றும் கழிவு நீர் அகற்றல், கட்டமைக்கப்பட்ட கோட்பாடு மற்றும் திட்டங்கள், அளவை அளவையிடல். | 02 மணித்தி யாலம் | 100% | 40% |
| 5 | மோட்டார் இயந்திர நிபுணத்துவம் | பொறியியல் வரைவு மற்றும் ஆக்கத் திறன், உற்பத்தித் தொழில்நுட்பவியல், இயந்திரப் பராமரிப்பு மற்றும் சக்தி முகாமைத்துவம், தன்னியக்க தொழில் நுட்பவியல், பெற்றோல்/ டீசல் இயந்திரம், மோட்டார் வாகன மின் தொழில் நுட்பம் | 02 மணித்தி யாலம் | 100% | 40% |
| 6 | அலுமினியப் பொருள் உருவமைத்தல் | அலுமினியப் பொருள் உருவமைத்தல் பற்றிய கோட்பாடு மற்றும் நடைமுறை, தொழில்நுட்ப வரைபடங்கள், தொழில் பற்றிய கணித திறன், சுகாதாரம்/ ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு, தகவல் தொடர்பு திறன். | 02 மணித்தி யாலம் | 100% | 40% |

07. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் வழங்கப்படும் துறைகள்** :

| புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள் | அதிகூடிய புள்ளித் தொகை |
|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 25 |
| 2. மேலதிக தொழிற் தகைமைகள் | 20 |
| 3. மேலதிக அனுபவம் | 30 |
| 4. மொழித் தேர்ச்சி | 10 |
| 5. கணனி அறிவு | 10 |
| 6. நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறமைகள் | 05 |
| **மொத்தம்** | **100** |

08. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளங்கள்** :

சகல வகையிலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகள் மாத்திரமே எழுத்துப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின் போது சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகள் மற்றும் முறையாக உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதிகள் என்பன சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

09. **விண்ணப்பப்பத்திரங்கள் அனுப்பப்பட வேண்டிய முறைகள்** :

(i) இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப ஏ4 தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி, இலககம் 1 தொடக்கம் 7 வரை முதலாம் பக்கத்திலும், இலக்கம் 8 முதல் 10 வரை இரண்டாம் பக்கத்திலும் ஏனைய விடயங்களை அடுத்தடுத்த பக்கங்களிலும் வருமாறு தயாரித்து தமது கையெழுத்தினால் முறையாகப் பூர்த்தி செய்து, "பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம், த. பெ. இல. 557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு 2023.10.23 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில "செய்துகாட்டுநர் பதவிக்கான விண்ணப்பம்" என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு மாற்றமான விண்ணப்பப்படிவங்கள், பூரணமில்லாத தகவல்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பங்களை தபாலில் அனுப்பும்போது ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக முன்கூட்டியே விண்ணப்பங்களை அனுப்புதல் உகந்ததாகும்.

(iii) பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப்படிவங்கள் பூரணப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும்.

(iv) பரீட்சைக் கட்டணம் ரூபா 1,000.00 ஆக இருப்பதோடு, அந்தக் கட்டணங்கள் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் மக்கள் வங்கியின் மத்திய நகரக் கிளை இலக்கமான 176-100-139026228 எனும் கணக்கிலக்கத்திற்கு, நாட்டிலுள்ள ஏதேனும் ஒரு மக்கள் வங்கியின் கிளையில் பணத்தைச் செலுத்தி, செலுத்தியற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய பகுதியில் கழன்றுவிடாதவாறு ஒட்டுதல் வேண்டும். உங்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றையும், உங்களுடன் வைத்துக்கொள்வது உகந்ததாகும். எந்தவொரு காரணத்துக்காகவும் பரீட்சைக் கட்டணம் மீள வழங்கப்படமாட்டாது என்பதோடு, காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(v) விண்ணப்பப்படிவங்களை தாம் சேவையாற்றும் நிறுவனத்தின் தலைவர் ஊடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(vi) திணைக்களத்திலுள்ள எந்தவொரு நபரின் பெயருக்கும் விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்படக்கூடாது என்பதோடு, அவ்வாறு அனுப்பப்படும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படும் விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஏதேனும் விண்ணப்பங்கள் தபாலில் அனுப்பப்பட்டதன் பின்னர் காணாமல் போதல் அல்லது தாமதமாகக் கிடைத்தல் போன்ற முறைப்பாடுகள் எதுவும் கவனத்தில் எடுக்கப்பட மாட்டாது. அதே வேளை, விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றியும் அறியத்தரப்படமாட்டாது.

10. **பரீட்சை ஒழுங்கு விதிகள்**

(i) உரிய முறையில் விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரி தமக்கு குறிக்கப்பட்ட பரீட்சை நிலையத்தின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டை சமர்ப்பிக்காத எந்தவொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

(ii) இப்பரீட்சைக்கத் தோற்றுவதற்காக விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளுக்காகவோ அல்லது இதர செலவுகளுக்காகவோ வேறெந்தக் கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது.

(iii) தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படுமளவு விண்ணப்பதாரர், தமது ஆளடையாளத்தை பரீட்சை மண்டபத்தில் உறுதிப்படுத்தல் வேண்டும். இதன் பொருட்டு

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ; அல்லது

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு என்பவை மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(iv) பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிமூலங்களில் மாத்திரமே நடைபெறும். விண்ணப்பிக்கப்படும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(v) விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமையுடையவர்கள் மாத்திரமே விண்ணப்பித் துள்ளனர் என்ற எடுகோளுக்கு அமைய குறித்த கட்டணத்தைச் செலுத்தி உரிய திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்த சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சையில் தோற்றுவதானது, தகைமைகளைக் கொண்டிருத்தல் என்பதை ஏற்றுக்கொண்டதாகக் கருதப்பட மாட்டாது.

(vi) பரீட்சைகளை நடாத்துதல் தொடர்பாக தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டுள்ளனர்.

(vii) இப்பரீட்சையானது தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவினால் கொழும்பில் பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும்.

11. **போலியான தகவல்கள் வழங்குதல் :**

உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பப்படிங்களில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவல்கள் போலியானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்புக்கு முன்னர் கண்டு பிடிக்கப்பட்டால் விண்ணப்பதாரியின் அபேட்சகத் தன்மை நிராகரிக்கப்படும். அவ்வாறான போலியான அல்லது பிழையான தகவல்கள் ஆட்சேர்ப்புக்குப் பின்னர் கண்டறியப்பட்டால் அதற்குரிய ஏற்பாடுகளுக்கு ஏற்ப சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12. வெற்றிடங்களைப் பூரணப்படுத்துவதற்கான அல்லது பூரணப்படுத்தாமல் இருப்பதற்கான உரிமை தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கே உள்ளது.

13. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அவ்வேளை சிங்கள மொழிக் கருத்தே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

எஸ். சீ. ஜகத்,
பணிப்பாளர் நாயகம்.

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்,
த. பெ. இல. 557,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10,
2023.09.22.

மாதிரி விண்ணப்பப் படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு)

**தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சார் வகுதி - 03) சேவைத் தொகையில் செய்துகாட்டுநர் (தரம் III) பதவிக்காக (மட்டுப்படுத்தப்பட்ட) ஆட்சேர்ப்பு செய்தல் - 2023**

| | |
|---|---|
| விண்ணப்பிக்கும் துறை | |
| விண்ணப்பிக்கும் மொழி மூலம் | |

1. விண்ணப்பதாரியின் பெயர் :

i. முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிடப்பட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :
.....................................................................................................................................................
.....................................................................................................................................................

ii. முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :
.....................................................................................................................................................
.....................................................................................................................................................

iii. முழுப் பெயர் (சிங்களத்தில் / தமிழில்):
.....................................................................................................................................................
.....................................................................................................................................................

2. தற்போது வகிக்கின்ற பதவி : ........................................................................................................................

i. குறித்த பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி ஆண்டு : .............. மாதம் : ..........திகதி : ..............

ii. விண்ணப்ப முடிவுத் திகதியன்று குறித்த பதவியில் சேவைக்காலம் வருடங்கள் : ................. மாதங்கள் : ................ நாட்கள் : ..............

3. முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் :

I. அலுவலக முகவரி : ................................................................
தொலைபேசி இலக்கம் : .................................................................

II. தனிப்பட்ட முகவரி : ................................................................
தொலைபேசி இலக்கம் : .................................................................
செல்லிடத் தொலைபேசி இலக்கம் : .................................................................
(முகவரி அல்லது தொலைபேசி இலக்கத்தில் மாற்றம் ஏற்படின் உடனடியாக அறியத்தரல் வேண்டும்.)

4. பிறந்த திகதி :
ஆண்டு :.................... மாதம் :................................... திகதி :...........................

5. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :
வருடங்கள் : ................. மாதங்கள் : ................ நாட்கள் : ..............

6. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ...........................................................

7. பால் (ஆண் / பெண்) : ....................................................................

8. குடியியல் நிலைமை :
திருமணமானவர்/ திருமணமாகாதவர்/ விதவை போன்றன: .............................................................................

9. கல்வித் தகைமைகள் :-

I. க.பொ.த. (சா. தர) ப் பரீட்சை

வருடம் : .......................................... பரீட்சை சுட்டிலக்கம் :.............................

| விடயம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

II. க. பொ. த. (உ. த.) பரீட்சை

வருடம் : ...................................... பரீட்சை சுட்டிலக்கம் : .......................

| விடயம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

10. தொழில் தகைமைகள் :

| சான்றிதழ் /டிப்ளோமா/பட்டம் அல்லது ஏனைய தகைமைகள் | ஆண்டு | தோற்றிய பாடங்கள் | பெறுபேறு | நிறுவனத்தின்/பல்கலைக் கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

11. சேவை அனுபவம் தொடர்பான விபரம் :

| சேவையாற்றிய நிறுவனம் | பதவி | சேவையாற்றிய காலப்பகுதி | அரசாங்க துறை/இடைநிலை அரசாங்க துறை/ தனியார் துறை போன்றன |
|---|---|---|---|
| | | | |

12. கணினித் திறமை தொடர்பாக பெற்றுள்ள தேர்ச்சிகள்

டிப்ளோமா :...............................................................................................................................................

சான்றிதழ் பாடநெறி : ...................................................................................................................................

13. ஆங்கில மொழி தொடர்பில் பெற்றுள்ள தேர்ச்சி :

ஆங்கில மொழி டிப்ளோமா பாடநெறி : ........................................................................................................

ஆங்கில மொழி சான்றிதழ் பாடநெறி: ..........................................................................................................

14. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட மக்கள் வங்கிக் கிளை :..........................................................................

பணம் செலுத்திய திகதி : ..............................................................................................................................

| பற்றுச்சீட்டு கழன்றுவிடாதவாறு இணைக்கப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். |
|---|

விண்ணப்பதாரியின் உறுதியுரை:

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவையும் உண்மையானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல் ஏதேனும் போலியானது அல்லது பிழையானது என நான் தெரிவு செய்யப்பட முன்னர் தெரியவருமிடத்து, எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாக தெரியவரின் எந்தவித நஷ்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவதற்குக் கட்டுப்பட்டுள்ளேன் என்பதையும் நான் அறிவேன்.

..........................................................................

திகதி : ................................... விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**திணைக்கள/ நிறுவனத் தலைவரின் சான்றிதழ்** :

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் ........................................... தொழில்நுட்பவியல் /தொழில்நுட்பக் கல்லூரியில் சேவையாற்றும் திரு./ திருமதி/ செல்வி ........................................... அவர்கள், .............................. எனும் பதவியில் பணியாற்றுபவர் எனவும் இவரது பணி மற்றும் நடத்தைகள் திருப்திகரமானவை எனவும், ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் இல்லை எனவும், அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான எண்ணங்கள் இல்லை எனவும், இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.....................................................

திகதி : ........................................ பணிப்பாளர்/அதிபர்/நிறுவனத் தலைவரின்

(பதவி முத்திரை) கையொப்பம்.

09-350/1

கல்வி அமைச்சு

## திறன்கள் அபிவிருத்தி, தொழிற் கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவு

தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

### தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சார் வகுதி - 03) சேவைத் தொகையில் செய்து காட்டுநர் (தரம் III) பதவிக்காக (திறந்த) ஆட்சேர்ப்புச் செய்தல் - 2023

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் காணப்படுகின்ற செய்து காட்டுநர் பதவிக்காக பின்வரும் துறைகளில் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| துறை |
|---|
| உலோக வேலை நிபுணத்துவம் |
| மோட்டார் இயந்திர நிபுணத்துவம் |
| மின் தொழில்நுட்ப நிபுணத்துவம் |
| கட்டட நிர்மாண நிபுணத்துவம் |
| அலுமினியப் பொருள் உருவமைத்தல் |

01. **ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் முறை :**

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவினால் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சையொன்றுக்குத் தோற்ற வேண்டியுள்ளதோடு, எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளிடையே திறமை அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெறுபவர்களில் இருந்து, நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இரு மடங்கு விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் எழுத்துப் பரீட்சை என்பவற்றில் பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, திறமை அடிப்படையில், நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமான தொகையினர் இணைத்துக் கொள்ளப்படுவர். இலக்கம் 6 இல் குறிப்பிடப்பட்ட விடயப் பரப்பின் கீழ் விண்ணப்பிக்கின்ற துறைக்கு ஏற்பான அறிவைப் பரீட்சிக்கின்ற வினாத்தாள் ஒன்றுக்கும் பொது அறிவு மற்றும் மதிநுட்பத்தைப் பரீட்சிக்கின்ற வினாத்தாள் ஒன்றுக்கும் சகல விண்ணப்பதாரிகளும் தோற்ற வேண்டும். இலக்கம் 7 இல் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கேற்ப கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

02. **தேவையான தகைமைகள்:**

**கல்வி மற்றும் தொழில் தகைமைகள்:**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் பதவிக்குப் பொருத்தமான துறையில் தேசிய தொழில் தகைமை (NVQ) 5 ஆம் மட்டத்தின் சம்பந்தப்பட்ட பாடப் பகுதியில் ஒரு பாநெறியை தொடர்ந்து சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் பதவிக்குப் பொருத்தமான (N.V.Q.) 4 ஆம் மட்டத்தின் தேசிய தொழிற் கல்வி நுட்பப் பாடநெறியில் சான்றிதழுடன் பதிவு செய்து மற்றும் தொழில் முறை தகைமைகளைப் பெற்ற பிறகு தொடர்புடைய துறையில் (05) ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிப்பட்ட ஒரு நிறுவனமொன்றின் மூலம் மரவேலை அல்லது உலோக வேலைத் தேர்ச்சி அல்லது மோட்டார் இயந்திரத் தேர்ச்சி/ மின்னியல் நிபுணத்துவம் அல்லது கட்டட நிர்மாணத் தேரச்சி, தொடர்பாக மூன்று வருட காலம் அல்லது அதற்கு அதிகமான கால பாடநெறி அல்லது அலுமினியப் பொருள் உருமைத்தல் துறையில் ஓராண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாடநெறி ஒன்றைப் பூர்த்தி செய்து சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

I. **அனுபவம் :**

அரசாங்க அல்லது அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றில் உரிய துறையில் ஒரு (01) வருடத்திற்குக் குறையாத காலம் சேவையாற்றிய அனுபவம் பெற்றிருத்தல்.

II. **உடல் ரீதியான தகைமை :**

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் சேவையாற்றக் கூடிய வகையிலும் பதவியின் கடமைகளை நிறைவேற்றக்கூடிய வகையிலும் போதியளவான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

III. **வேறு :**

- இலங்கைப் பிரசையாக இருத்தல்;
- விண்ணப்பதாரிகள் சிறந்த குணவியல்புகளை உடையவர்களாக இருத்தல்;
- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் எல்லா விதத்ததிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

03. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேர்ச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள்/ அநாதைகள், தபுரதாரர்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வகையில் தாங்கள் அது தொடர்பாக பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) நியமனமானது 1 வருட நன்னடத்தை காலத்திற்கு உட்பட்டது. செய்துகாட்டுநர் III ஆம் தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டு 3 வருட காலத்தினுள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதற்கு இயைபான சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப பதவியில் இணைந்து ஐந்து (5) வருட காலத்தினுள், சேவையில் இணைந்த மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழியில் குறித்த மட்டத்தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டியதோடு, இந்தப் பதவிக்கு உரித்தான ஏனைய அரச கரும மொழி தொடர்பாக குறித்த தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் ஏனைய ஒழுங்கு விதிகளுக்கும் இந்த நியமனமானது கட்டுப்பட்டுள்ளது.

04. **வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரிகள் 18 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

05. **சம்பள அளவு :**

2016.02.25 ஆந் திகதி கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை 03/2016 இல் MTI - 2016 சம்பளக் குறியீட்டின் கீழ் இப்பதவிக்காக ரூபா 29,840.00 - 10 × 300 - 11 × 350 - 10 × 560 - 10 × 660 - ரூபா 48,890.00 வான மாதாந்த சம்பள

அளவு உரித்தாகும். அச்சுற்றறிக்கையின் II ஆவது உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

06. **எழுத்துப் பரீட்சைக்கான விடயப் பரப்பு** :

| தொடர் இலக்கம் | வினாப் பத்திரத்தின் பெயர் | விடயப் பரப்பு | நேரம் | அதி கூடிய புள்ளித் தொகை | சித்தியடைய வேண்டிய புள்ளித் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | பொது அறிவு மற்றும் மதிநுட்பத்தைப் பரீட்சித்தல் | சமகால நடைமுறை விடயங்கள், சமூக நிகழ்வுகள் தொடர்பான கிரகித்தல் மற்றும் சர்வதேச நிகழ்வுகள் தொடர்பான அறிவு மற்றும் ஆக்கபூர்வமான சிந்தனா சக்தி, பிரச்சினைகள் தீர்க்கின்ற ஆற்றல் மற்றும், பகுப்பாய்வு செய்வதற்கான திறமை என்பவற்றைப் பரீட்சிப்பதற்கான சுருக்க வினாத்தாள் ஆகும். | 01 மணித்தியாலம் | 100% | 40% |
| 2 | உலோக வேலை நிபுணத்துவம் | பொறியியல் விஞ்ஞானம், தொலைத் தொடர்பு ஆற்றல், தொழில்நுட்ப வரைவு, ஒட்டும் பொறிமுறைத் தேர்ச்சி (கோட்பாடு), உருக்கி இணைக்கும் வேலை | 02 மணித்தியாலம் | 100% | 40% |
| 5 | மோட்டார் இயந்திர நிபுணத்துவம் | பொறியியல் வரைவு மற்றும் ஆக்கத் திறன், உற்பத்தித் தொழில்நுட்பவியல், இயந்திரப் பராமரிப்பு மற்றும் சக்தி முகாமைத்துவம், தன்னியக்க தொழில் நுட்பவியல், பெற்றோல்/ டீசல் இயந்திரம், மோட்டார் வாகன மின் தொழில் நுட்பம் | 02 மணித்தியாலம் | 100% | 40% |
| 3 | மின்னியல் நிபுணத்துவம் | மின்சார இயந்திரங்கள், மின் வலு மற்றும் தன்னியக்க கட்டுப்பாட்டுத் தொகுதி, நுண்ணியல்சார் செயலாக்கத் தொகுதி, பிரயோக மின் அளவீடு, மின் கம்பியிழுத்தல். | 02 மணித்தியாலம் | 100% | 40% |
| 4 | கட்டட நிர்மாண நிபுணத்துவம் | கட்டட நிர்மாணம் மற்றும் பராமரிப்பு, கட்டுமான அளவீடு, நீர் சுத்திகரிப்பு மற்றும் கழிவு நீர் அகற்றல், கட்டமைக்கப்பட்ட கோட்பாடு மற்றும் திட்டங்கள், அளவை அளவையிடல். | 02 மணித்தியாலம் | 100% | 40% |
| 6 | அலுமினியப் பொருள் உருவமைத்தல் | அலுமினியப் பொருள் உருவமைத்தல் பற்றிய கோட்பாடு மற்றும் நடைமுறை, தொழில்நுட்ப வரைபடங்கள், தொழில் பற்றி கணித திறன், சுகாதாரம்/ ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு, தகவல் தொடர்பு திறன். | 02 மணித்தியாலம் | 100% | 40% |

07. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் வழங்கப்படும் துறைகள் :**

| *புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள்* | *அதிகூடிய புள்ளித் தொகை* |
|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 25 |
| 2. மேலதிக தொழிற் தகைமைகள் | 20 |
| 3. மேலதிக அனுபவம் | 30 |
| 4. மொழித் தேர்ச்சி | 10 |
| 5. கணினி ஆற்றல் | 10 |
| 6. நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டுகின்ற திறமைகள் | 05 |
| **மொத்தம்** | **100** |

08. **விண்ணப்பதாரரின் ஆளடையாளம் :**

சகல வகையிலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகள் மாத்திரமே எழுத்துப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின் போது சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகள் மற்றும் முறையாக உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதிகள் என்பன சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

09. **விண்ணப்பப்பத்திரங்கள் அனுப்பப்பட வேண்டிய முறைகள் :**

(i) இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப ஏ4 தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி, இலக்கம் 1 தொடக்கம் 7 வரை முதலாம் பக்கத்திலும், இலக்கம் 8 முதல் 10 வரை இரண்டாம் பக்கத்திலும் ஏனைய விடயங்களை அடுத்தடுத்த பக்கங்களிலும் வருமாறு தயாரித்து தமது கையெழுத்தினால் முறையாகப் பூர்த்தி செய்து, "பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம், த. பெ. இல. 557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு 2023.10.23 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "செய்துகாட்டுநர் பதவிக்கான விண்ணப்பம்" என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு மாற்றமான விண்ணப்பப்படிவங்கள், பூரணமில்லாத தகவல்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பங்களை தபாலில் அனுப்பும்போது ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக முன்கூட்டியே விண்ணப்பங்களை அனுப்புதல் உகந்ததாகும்.

(iii) பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப்படிவங்கள் பூரணப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும்.

(iv) பரீட்சைக் கட்டணம் ரூபா 1,000.00 ஆக இருப்பதோடு, அந்தக் கட்டணங்கள் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் மக்கள் வங்கியின் மத்திய நகரக் கிளை இலக்கமான 176-100-139026228 எனும் கணக்கிலக்கத்திற்கு, நாட்டிலுள்ள ஏதேனும் ஒரு மக்கள் வங்கியின் கிளையில் பணத்தைச் செலுத்தி, செலுத்தியற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய பகுதியில் கழன்றுவிடாதவாறு ஒட்டுதல் வேண்டும். உங்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றையும், பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றையும் உங்களுடன் வைத்துக்கொள்வது உகந்ததாகும். எந்தவொரு காரணத்துக்காகவும் பரீட்சைக் கட்டணம் மீள வழங்கப்படமாட்டாது என்பதோடு, காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(v) விண்ணப்பப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது, அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர் / சமாதான நீதவான் /சத்தியப்பிரமாண ஆணையாளர் /சட்டத்தரணி /பிரசித்த நொத்தாரிசு /முப்படை அதிகாரி ஒருவர் அல்லது 41,580 ரூபாவை (அ. நி. சு. 03/2016 - I ஆம் அட்டவணைக்கு ஏற்ப) திரட்டிய மாதாந்த சம்பளமாகப் பெறும் அரசாங்கத்தில் நிரந்தரப் பதவி வகிக்கும் அதிகாரி ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(vi) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தாம் கடமையாற்றுகின்ற திணைக்களத்தின் திணைக்களத் தலைவர் மூலம் முன் வைக்கப்படல் வேண்டும்.

(vii) திணைக்களத்திலுள்ள எந்தவொரு நபரின் பெயருக்கும் விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்படக்கூடாது என்பதோடு, அவ்வாறு அனுப்பப்படும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படும் விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஏதேனும் விண்ணப்பங்கள் தபாலில் அனுப்பப்பட்டதன் பின்னர் காணாமல் போதல் அல்லது தாமதமாகக் கிடைத்தல் போன்ற முறைப்பாடுகள் எதுவும் கவனத்தில் எடுக்கப்பட மாட்டாது. அதே வேளை, விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றியும் அறியத்தரப்பட மாட்டாது.

*10.* **பரீட்சை ஒழுங்கு விதிகள் :**

(i) உரிய முறையில் விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரி தமக்கு குறிக்கப்பட்ட பரீட்சை மத்திய நிலையத்தின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டை சமர்ப்பிக்காத எந்தவொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

(ii) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளுக்காகவோ அல்லது இதர செலவுகளுக்காகவோ வேறெந்தக் கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது.

(iii) தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படுமளவு விண்ணப்பதாரர், தமது ஆளடையாளத்தை பரீட்சை மண்டபத்தில் உறுதிப்படுத்தல் வேண்டும். இதன் பொருட்டு-
- (அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ; அல்லது
- (ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு என்பவை மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(iv) பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிமூலங்களில் மாத்திரமே நடைபெறும். விண்ணப்பிக்கப்படும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(v) விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமையுடையவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற எடுகோளிற்கு அமைய குறித்த கட்டணத்தைச் செலுத்தி உரிய திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்த சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சையில் தோற்றுவதானது, தகைமைகளைக் கொண்டிருத்தல் என்பதை ஏற்றுக்கொண்டதாகக் கருதப்பட மாட்டாது.

(vi) பரீட்சைகளை நடாத்துதல் தொடர்பாக தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டுள்ளனர்.

(vii) இப்பரீட்சையானது தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவினால் கொழும்பில் பரீட்சை மத்திய நிலையங்களில் நடாத்தப்படும்.

*11.* **போலியான தகவல்களை வழங்கல் :**

உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பப்படிங்களில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவல்கள் போலியானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்புக்கு முன்னர் கண்டு பிடிக்கப்பட்டால் விண்ணப்பதாரியின் அபேட்சகத் தன்மை நிராகரிக்கப்படும். அவ்வாறான போலியான அல்லது பிழையான தகவல்கள் ஆட்சேர்ப்புக்குப் பின்னர் கண்டறியப்பட்டால் அதற்குரிய ஏற்பாடுகளுக்கு ஏற்ப சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

*12.* வெற்றிடங்களைப் பூரணப்படுத்துவதற்கான அல்லது பூரணப்படுத்தாமல் இருப்பதற்கான உரிமை தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கே உள்ளது.

13. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அவ்வேளை சிங்கள மொழிக் கருத்தே மேலோங்கி நிற்க வேண்டும்.

எஸ். சீ. ஜகத்,
பணிப்பாளர் நாயகம்.

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்,
த. பெ. இல. 557,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10,
2023.09.22.

மாதிரி விண்ணப்பப் படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

**தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சார் வகுதி - 03) சேவைத் தொகையில் செய்துகாட்டுநர் (தரம் III) பதவிக்காக (திறந்த) ஆட்சேர்ப்பு செய்தல் - 2023**

| | |
|---|---|
| விண்ணப்பிக்கின்ற துறை | |
| விண்ணப்பிக்கின்ற மொழி | |

1. விண்ணப்பதாரியின் பெயர் :
   i. முதலெழுத்துக்கள் இறுதியில் குறிப்பிடப்பட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :
   ..........................................................................................................................................
   ..........................................................................................................................................
   ii. முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :
   ..........................................................................................................................................
   ..........................................................................................................................................
   iii. முழுப் பெயர் (சிங்களத்தில் / தமிழில்):-
   ..........................................................................................................................................
   ..........................................................................................................................................

2. முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் :
   I. அலுவலக முகவரி : .................................................................
   தொலைபேசி இலக்கம் : .................................................................
   II. தனிப்பட்ட முகவரி : .................................................................
   தொலைபேசி இலக்கம் : .................................................................
   செல்லிடத் தொலைபேசி இலக்கம் : .................................................................
   (முகவரி அல்லது தொலைபேசி இலக்கத்தில் மாற்றம் ஏற்படின் உடனடியாக அறியத்தரல் வேண்டும்.)

3. பிறந்த திகதி :
   ஆண்டு :.................... மாதம் :.................................. திகதி :...........................

4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :
   வருடங்கள் :.................... மாதங்கள் :.................................. நாட்கள் :...........................

5. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ..........................................................

6. பால் (ஆண் / பெண்) : ..................................................................

7. குடியியல் நிலை :
திருமணமானவர்/ திருமணமாகாதவர்/ விதவை போன்றன: .............................................................................

8. கல்வித் தகைமைகள் :

I. க.பொ.த (சா. த) ப் பரீட்சை

வருடம் : ...................................................................... பரீட்சை சுட்டிலக்கம் :.............................

| விடயம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

II. க. பொ. த. (உ. த.) பரீட்சை

வருடம் : ...................................... பரீட்சை சுட்டிலக்கம் : .......................

| விடயம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

9. தொழில் தகைமைகள் :

| சான்றிதழ் /டிப்ளோமா/பட்டம் அல்லது ஏனைய தகைமைகள் | ஆண்டு | தோற்றிய பாடங்கள் | பெறுபேறு | நிறுவனத்தின்/பல்கலைக் கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. சேவை அனுபவம் தொடர்பான விபரம் :

| சேவையாற்றிய நிறுவனம் | பதவி | சேவையாற்றிய காலப்பகுதி | அரச துறை/இடைநிலை அரச துறை/ தனியார் துறை போன்றன |
|---|---|---|---|
| | | | |

11. கணினித் திறமை தொடர்பாக பெற்றுள்ள தேர்ச்சிகள் –
டிப்ளோமா :........................................................................................................................................................
சான்றிதழ் பாடநெறி : ...............................................................................................................................................

12. ஆங்கில மொழி தொடர்பில் பெற்றுள்ள தேர்ச்சி –
ஆங்கில மொழி டிப்ளோமா பாடநெறி : .......................................................................................................................
ஆங்கில மொழி சான்றிதழ் பாடநெறி: ..........................................................................................................................

13. நீங்கள் அரச பதவி ஒன்றினை வகித்து அதிலிருந்து பதவி நீக்கப்பட்டு உள்ளீர்களா ?... ..................

14. தற்போது அரச பதவி வகிப்பவராயின் தங்களுக்கு எதிராக திணைக்களத்தினால் ஒழுக்காற்று நடவடிக்கை ஏதேனும் மேற்கொள்ளப்பட்டு உள்ளதா? ...............................................................

15. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட மக்கள் வங்கிக் கிளை :.......................................................................................................
பணம் செலுத்திய திகதி : ..........................................................................................................................................

| |
|---|
| பற்றுச்சீட்டு கழன்றுவிடாதவாறு இணைக்கப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். |

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவையும் உண்மையானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல் ஏதேனும் போலியானது அல்லது பிழையானது என நான் தெரிவு செய்யப்பட முன்னர் தெரியவருமிடத்து, எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாக தெரியவரின் எந்தவித நஷ்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவதற்குக் கட்டுப்பட்டுள்ளேன் என்பதையும் நான் அறிவேன்.

.....................................................................
திகதி : ................................... விண்ணப்பதாரியின் கையொப்பம்.

16. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்.**
இவ் விண்ணப்பத்தினை முன்வைக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ..................................................................... என்பவரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்பதனையும், அவர் .......................................................................... ஆந் திகதி முன்னிலையில் அவரின் கையொப்பத்தினை இட்டார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி :........................................

..............................................................
கையொப்பத்தினை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்

(இப்பகுதி உரித்தாவது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மாத்திரமே.)

**திணைக்களத்தின்/ நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

இவ் அமைச்சில் இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் கடமை புரிகின்ற ........................................ திரு./திருமதி/செல்வியின் தற்போது .................................................... கடமை ஆற்றுகின்றார் என்பதனையும், அவரது வேலைகள் மற்றும் நடத்தை மகிழ்ச்சிகரமானதெனவும், ஒழுக்காற்றுச் செயல்கள் எதனையும் செய்யவில்லை என்பதனையும், அது தொடர்பாக எந்தவிதமான செயல்களையும் மேற்கொள்வதற்கு எண்ணியதாகவுமில்லை என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன். அவர் இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் சேவையில் இருந்து விடுவிக்க முடியும். /முடியாது.

திகதி .........................................
(பதவி முத்திரை)

..............................................................
திணைக்களத் தலைவரின் அல்லது
அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரின்
கையொப்பம்.

09-350/2

## நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

இலங்கை சுங்கத் திணைக்களம்

### இலங்கை சுங்கத் திணைக்களத்தின் உதவி சுங்க அத்தியட்சகர் தரம் II பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2023

இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் உதவி சுங்க அத்தியட்சகர் தரம் II பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த பரீட்சைக்குத் தகுதிபெற்றுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. அதற்கான விண்ணப்பப் படிவம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதோடு, இதற்காக நிகழ்நிலையில் (Online) மாத்திரம் விண்ணப்பப்பிக்கலாம். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான இறுதித் திகதி 2023.10.16 ஆகும்.

**குறிப்பு 1** - நிகழ்நிலையில் விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளப்படுவதானது 2023.09.22 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பமாகும் என்பதோடு 2023.10.16 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணியுடன் முடிவடையும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் முதல் மூன்று நாட்களுக்கு (3) குறைபாடுகளைக் கொண்டுள்ள விண்ணப்பப் படிவங்களைத் திருத்துவதற்கு விண்ணப்பதாரிகளுக்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. முழுமைபெறாத விண்ணப்பப் படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் உதவி சுங்க அத்தியட்சகர் தரம் II பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2023ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்தில் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும். பரீட்சை நடைபெறும் திகதியானது பத்திரிகை அறிவித்தல்கள் மூலம் உரிய காலத்தில் அறிவிக்கப்படும். பரீட்சையினை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச்செய்யும் அதிகாரம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினை சார்ந்துள்ளது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் மேற்குறித்த பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. **தகைமைகள்**:

(i) **ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தாம்** :

(அ) இலங்கைப் பிரசையாகவும் ;

(ஆ) நல்லொழுக்கமுடையவராகவும் ;

(இ) விண்ணப்பமுடிவுத் திகதியன்று 21 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல்,இதனை தகுந்த சான்றிதழ்களைசமர்ப்பிப்பதன் மூலம் நிறுவுதல் வேண்டும். (அதற்கிணங்க, வயது தொடர்பான தகமையைப் பூர்த்தி செய்யப்படுவது விண்ணப்பதாரர் 2002.10.16 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பிறந்திருப்பதுடன் மற்றும் 1988.10.16 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்)

**குறிப்பு 2** : ஏதேனும் சமயப் பிரிவொன்றில் மதகுரு அந்தஸ்திலிலுள்ள எந்தவொரு நபருக்கும் இப் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

(ii) **உடற் தகைமை** : ஆண்களின் விடயத்தில் அவர்களுடைய உயரமானது 5 அடி 5 அங்குலங்களுக்கு குறையாமலும், மார்புச் சுற்றளவு (விரிவடைந்த நிலையில்) 33 அங்குலங்களுக்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.

பெண்களின் விடயத்தில் அவர்களுடைய உயரமானது 5 அடி 3 அங்குலுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

(iii) **கல்வித் தகைமை**: விண்ணப்பதாரிகள் பின்வரும் கல்வித் தகைமைகளை உடையவர்களாக இருத்தல் வேண்டும்:

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட மூன்று (03) ஆண்டுகளுக்குக் குறையாத கற்கை காலத்துடன் கூடிய பட்டம், அத்துடன்,

(ஆ) கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரப்)பரீட்சையில் ஆங்கில மொழியில் ஆகக் குறைந்தது திறமைச் சித்தியினைப் பெற்றிருத்தல் (விருப்பத்திற்குரிய பாடப் பெறுபேறு கவனத்திற்கொள்ளப்படமாட்டாது)

அல்லது

கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் (உயர் தர) பரீட்சையில் ஆங்கில மொழியினை ஒரு பாடமாகத்தோற்றி, அதில் ஆகக் குறைந்தது சாதாரண சித்தியினைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு 3** : பட்டப் பரீட்சையொன்றின் பெறுபேறிற்காக காத்திருக்கும் எந்தவொருவரும் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டார். எனினும், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டப் படிப்புப் பரீட்சையொன்றில் விண்ணப்பதாரர் தேர்ச்சிபெற்றுள்ளார் என்ற விடயம் அடங்கிய உத்தியோகபூர்வ கடிதமொன்றினை குறித்த பல்கலைக்கழகத்தின் பதிவாளரிடமிருந்து பெற்று அதனைச் சமர்ப்பிக்கு மிடத்து அவர் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படலாம்.

03. **சேவை நிபந்தனைகள்**:

I. வேதனம் - இப்பதவிக்கான திரட்டிய மாதாந்த வேதன அளவுத்திட்டம் வருமாறு :

பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இற்கு அமைய, சம்பள அளவுத்திட்டம் MN – 5 என்ற சம்பளத் தொகுதியில், ரூபா 34,605 – 660×10 – 755×11 - 930 × 15 = ரூபா 63,460.00 ஆகும்;

II. இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியக் கொடுப்பவினை வழங்குவது தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள கொள்கைத் தீர்மானங்களுடன் இணங்குதலும் வேண்டும்;

III. சித்திபெற்றுத் தெரிவாகும் விண்ணப்பதாரர்கள் மூன்று (3) வருட தகுதிகாண் நிலையில் வைக்கப்பட்டு நியமனம் வழங்கப்படும்;

IV. நியமனம் பெறுபவர்கள் நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றக் கூடிய உடல் தகுதியினைப்பெற்றுள்ளார்களா இல்லையா என்பதனை பரீட்சிப்பதற்காக அரசாங்க மருத்துவ அதிகாரி ஒருவரினால் நடாத்தப்படும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுதல் வேண்டும்;

V. நியமனம் பெறுபவர்கள் இரவிலும் பகலிலும் சேவையாற்றுவதற்கு நேரிடலாம். அவ்வாறே அவர்கள் இத் தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பணிக்கப்பட்டுள்ளார்கள்;

VI. அரசாங்க வர்த்தமானி அறிவித்தலின் பகுதி I இன் (II அ) ஆம் பிரிவின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகள் மீது தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகளின் கவனம் கோரப்படுகின்றது.

04. **பரீட்சைத் திட்டம்**.- ஆட்சேர்ப்புப் பரீட்சை மூன்று (03) வினாத்தாள்களைக் கொண்டுள்ளது. அதன் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| (1) பொது உளச்சார்பு (01 மணித்தியாலம்) | 100 புள்ளிகள் |
| (2) ஆங்கிலமொழி (1 1/2 மணித்தியாலம்) | 100 புள்ளிகள் |
| (3) படைப்பாற்றல், பகுப்பாய்வுத் தொடர்பாடல் திறன் (03 மணி) | 100 புள்ளிகள் |
| மொத்தம் | 300 புள்ளிகள் |

**பொது உளச்சார்பு வினாத்தாள்**: இவ்வினாத்தாளானது விண்ணப்பதாரர்களின் மொழித் தேர்ச்சி மற்றும் தர்க்க ஆற்றல் என்பனவற்றினை அளவிடும் வகையில் பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளிக்கும் மாதிரியில் ஐம்பது (50) வினாக்களைக் கொண்டிருக்கும். விண்ணப்பதாரர்கள்அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**ஆங்கில மொழி வினாத்தாள்**: விண்ணப்பதாரர்களின் வாசிப்பு, எழுத்து, கிரகித்தல் மற்றும் தொடர்பாடல் திறன்களை அளவிடுவதற்காக தயாரிக்கப்பட்டதாக இருக்கும். விண்ணப்பதாரர்கள் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**படைப்பாற்றல், பகுப்பாய்வுத் தொடர்பாடல் திறன்**: கொடுக்கப்பட்ட தலைப்புகள் மற்றும் கருப் பொருட்களிலிருந்து விண்ணப்பதாரர் தேர்ந்தெடுத்த தலைப்புகள் மற்றும் கருப்பொருட்கள் என்பனவற்றின் கீழ் வருகின்ற கருத்துக்கள் மற்றும் தகவல்களைப் பகுப்பாய்வுசெய்தல், அவற்றினைத் தொகுத்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் விண்ணப்பதாரர்கள் பெற்றுள்ள விடய அறிவு மற்றும் தர்க்கிக்கும் ஆற்றல் என்பனவற்றினை மதிப்பீடுசெய்தல், அவ்வாறே, சிக்கலான பந்தியொன்றினை, ஆவணமொன்றினை, அல்லது விஞ்ஞாபனமொன்றினை விளங்கிக் கொள்வதற்கும், அவற்றிலுள்ள பிரதான கருப்பொருட்களை தமது சொந்த மொழி நடையில் சுருக்கமாகவும் துல்லியமாகவும் முன்வைப்பதற்குமாகவும் விண்ணப்பதாரர் பெற்றுள்ள ஆற்றல்களை இது மதிப்பீடு செய்யும்.

**குறிப்பு - 4 :** இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்மொழிகளில் நடாத்தப்படும். இந்த அறிவித்தலின் பந்தி 02 (iii) இன் பிரகாரம், தகுதிபெறுகின்ற விண்ணப்பதரிகள், தாம் குறித்த பரீட்சைக்குத் தோற்றிய மொழியிலோ அல்லது அரச கருமமொழி ஒன்றிலோ இப் பரீட்சைக்குத் தோற்றலாம். ஆயினும், பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கின்ற மொழியைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

(i) தெளிவற்ற எழுத்துக்கும், எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும் ;

(ii) பரீட்சைக்கு தோற்றுவதற்கு பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப் பெறுவதானது, பரீட்சைக்காக தேவையான தகைமைகளை பூர்த்திசெய்துள்ளார் எனக் கருதப்படலாகாது;

(iii) மதிப்பிடுகை - பரீட்சையில் தேர்வதற்காக விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஆகக் குறைந்தது 50% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும். அவ்வாறு மூன்று பாடத்திலும் தேர்வுப் புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகள் பெறப்பட்டு, தற்போதுள்ள வெற்றிடங்களை விடவும் இரண்டு மடங்கிலான விண்ணப்பதாரிகளின் பெயர்களை உள்ளடக்கி, இலங்கைப் பரீட்சை திணைக்களம், விண்ணப்பதாரிகளின் பரீட்சை சுட்டிலக்க ஒழுங்கு வரிசை அல்லது அகராதி ஒழுங்குவரிசைக்கு அமைய ஆவணமொன்றினைத் தயாரித்து சுங்கப் பணிப்பாளர் நாயகம், இலங்கைச் சுங்கத் திணைக்களத்திற்கு பெற்றுக்கொடுக்கும். அதற்கமைய, குறித்த ஆவணத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளின் தகைமையினை மதிப்பிடுவதற்காக நேர்முகப் பரீட்சையொன்றுக்கு அழைக்கப்படுவர். இதில் விளையாட்டுத் திறமைகளுக்காக பின்வருமாறு 05 புள்ளிகள் வழங்கப்படுவதோடு, அதன்பின்னர் பொதுவான நேர்முகப்பரீட்சையொன்றுக்கும் அழைக்கப்படுவர். அதில் விண்ணப்பதாரிகளுக்கு எதுவித புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது. இங்கு தகைமை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களின் உண்மைத் தன்மை போன்ற விடயங்கள் மாத்திரம் பரீட்சிக்கப்படும்.

**தகைமையினை மதிப்பீடுசெய்யும் நேர்முகப்பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் நடைமுறை:-**

தேசிய மட்ட ஒற்றையர் விளையாட்டுப் போட்டி ஒன்றில் பங்கேற்றுப் பெறப்பட்ட முதலிடத்திற்காக 05 புள்ளிகளும், இரண்டாமிடத்திற்கு 03 புள்ளிகளும், மூன்றாமிடத்திற்கு 02 புள்ளிகளும் வழங்கப்படும்.

இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, சர்வதேச ரீதியாக ஒற்றையர் போட்டியொன்றில் பெறப்பட்ட முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களுக்காக 05 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெறும் அணியிலுள்ள உறுப்பினராயின் 03 புள்ளிகளையும், இரண்டாம் இடத்தைப் பெறும் அணியிலுள்ள உறுப்பினராயின் 02 புள்ளிகளையும், மூன்றாம் இடத்தைப் பெறும் அணியிலுள்ள உறுப்பினராயின் 01 புள்ளியினையும் பெறுவர்.

இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி சர்வதேச ரீதியாக பங்கேற்ற விளையாட்டுப் போட்டியொன்றில் பெறப்பட்ட முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ள அணியிலுள்ள உறுப்பினராயின் 05 புள்ளிகள் வழங்கப்படும்.

இந்நோக்கத்திற்காக 17 வயதுக்கு கீழ்பட்டவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

விளையாட்டுப் போட்டிகளுக்காக வழங்கப்படுகின்ற புள்ளிகள் அதிகபட்ச தகைமையொன்றுக்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்படும்.

நேர்முகத் தேர்வுக்கு சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்கள் யாவும் விளையாட்டு என்ற விடயம் தொடர்பான தேசிய அதிகாரியொருவரின் சான்றிதழினைப் பெற்று சமர்ப்பித்தல் வேண்டும்.

05. **தேர்ந்தெடுப்பதற்கான அடிப்படை**: எழுத்துப் பரீட்சையிலும், நேர்முகப்பரீட்சையிலும் சித்தியடைந்த பரீட்சார்த்திகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக,நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் அனுமதிக்கப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கேற்ப நியமனங்களை வழங்குவதற்காக தெரிவுசெய்யப்படுவர். ஆட்சேர்ப்புச் செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட மொத்தப் பதவி வெற்றிடங்களில் 10% இற்கு மேற்படாத வெற்றிடங்கள் பெண் விண்ணப்பதாரிகளுக்காக ஒதுக்கப்படும்.

06. (I) **பெறுபேற்றினை வெளியிடல்**: எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்து, நேர்முகப்பரீட்சைக்குத் தகுதிபெற்ற விண்ணப்பதாரர்களது நேர்முகப் பரீட்சைப் புள்ளிகளை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்குப் பெற்றுக்கொடுத்த பின்னர், அப் புள்ளிகள் மற்றும் எழுத்து மூலப் பரீட்சைப்புள்ளிகளைத் திரட்டி இறுதி முன்னுரிமைப் பட்டியலினை இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் தயாரித்து சுங்கப் பணிப்பாளர் நாயகம்,இலங்கைச் சுங்கத் திணைக்களத்திற்குப் பெற்றுக் கொடுக்கும். முன்னுரிமைப் பட்டியலினை சமர்ப்பித்ததன் பின்னர் சுங்கப் பணிப்பாளர் நாயகம், இலங்கைச் சுங்கத் திணைக்களத்தினால் பெறுபேறுகளை வெளியிடுவதற்குப் பொருத்தமானதொரு திகதியினை குறிப்பிட்டு அனுப்பிய பின்னர், எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்குமாகவும் பெறப்பட்ட புள்ளிகள்/ மொத்தப் புள்ளிகளைக் குறிப்பிட்டு பெறுபேற்றுக் குறிப்பொன்றினை பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அனுப்புவதற்கு அல்லது www.results.examinations.gov.lk என்ற இணையதளம் மூலம் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும்.

**குறிப்பு 5** - சுங்கத் திணைக்கள அலுவல்களின் தன்மைக்கு அமைய, பெண் அலுவலர்களும் சுழற்சி முறையில் இரவு நேரத்திலும் சேவையாற்ற நேரிடலாம்.

06. விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் பதவியோடு தொடர்பான அனைத்து தகைமைகளையும் பரீட்சைக்கான விண்ணப்பம் கையேற்கப்படுகின்ற இறுதித் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்திருப்பது கட்டாயமானதாகும்.

07. **விண்ணப்பிக்கும் முறை** :

(i) நிகழ்நிலை (Online) வழியான விண்ணப்பப் படிவங்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் பூரணப்படுத்தல் வேண்டும். செல்லுபடியான விண்ணப்பப் படிவம் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது/ ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பது தொடர்பில் வலையமைப்பிற்கு நுளைவதற்காக பயன்படுத்தப்படுகின்ற செல்லிட தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தியொன்றின் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (E-mail) மூலம் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை வழியில் விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்திசெய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பது எவ்வாறு என்பது குறித்து ஏற்படுத்தப்பட்டுள்ள பொது வழிகாட்டுதல்களை (Common Instructions) விண்ணப்பதாரர்கள் பதிவிறக்கம் செய்துகொள்ளவும். விண்ணப்படிவத்தை பூர்த்தி செய்கையில் இந்த வழிகாட்டுதல்கள் கட்டாயமாகப் பின்பற்றவும். விண்ணப்பப் படிவத்தின் அச்சுப் பிரதியில் பின்னர் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு திருத்தமும் செல்லுபடியானதாக கருதப்படமாட்டாது. முழுமையாக பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் யாவும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

அரச சேவையில்/கூடடுத்தாபனங்கள்/நியதிச்சட்ட சபைகளில் தற்போது பணியாற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் நிறுவனத் தலைவரின் உடன்பாட்டினைப் பெற்றதன் பின்னர், இப்பரீட்சைக்காக விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன், எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுகையில் விண்ணப்பதாரர்கள் தற்போது வகிக்கின்ற சேவையிலிருந்து/ பதவியிலிருந்து விடுவிகப்பட முடியும் என நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்தப்படட கடிதமொன்றினை நேர்முகப் பரீட்சைச் சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) இப் பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தினை செலுத்துகையில் நிகழ்நிலை வழியாக ஏற்படுத்தப்பட்டுள்ள பின்வரும் கட்டணக் கொடுப்பனவு முறைகளில் ஏதேனுமொரு வழிமுறையொன்றின் கீழ் மாத்திரம் கட்டணம் செலுத்துதல் வேண்டும்.

(i) ஏதேனும் வங்கியொன்றின் கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card)

(ii) நிகழ்நிலையில் கொடுப்பனவு செய்வதற்காக செயலாக்கம் செய்யப்பட்ட பற்று அட்டை மூலம் (Debit Card with Online Payment Facility)

(iii) இலங்கை வங்கியின் ஆன்லைன் பேன்கிங் முறைமை மூலம் (Online Banking Method, Bank of Ceylon)

(iv) ஏதேனும் இலங்கை வங்கிக் கிளையொன்றின் மூலம் (Slip Payment Bank of Ceylon)

**குறிப்பு** 6 - மேற்குறித்த முறைமை மூலம் கொடுப்பனவினை மேற்கொள்கின்ற முறை தொடர்பிலான வழிகாட்டல்கள் இணையதளத்தில் பரீட்சைகளுக்கான தொழில்நுட்ப வழிகாட்டுதல்கள் என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(iii) கட்டணம் கிடைக்கப்பெற்றதும் குறுஞ்செய்தி (SMS) ஒன்றின் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணம் முழுமையாக செலுத்தப்படுதல் வேண்டும். கட்டணம் குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப் படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறித்த கட்டண முறையின் கீழ் பரீட்சைக் கட்டணத்தை செலுத்துவதில் ஏற்படும் தாமதங்களை பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்காது.

08.(I) **பரீட்சைக்கான அனுமதி அட்டை** : வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க மதிப்பீட்டின் பேரில், விண்ணப்பங்கள் கையேற்கப்படும் இறுதித் திகதியன்று அல்லது அத்தினத்திற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி, விண்ணப்பப் படிவங்களை முறையாக நிகழ்நிலையில் அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன், அது குறித்து பரீட்சை திணைக்களம் பத்திரிகையிலும் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணைய தளத்திலும் அறிவித்தல் ஒன்றினை வெளியிடும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் தமது அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஏற்பாட்டுக் கிளையுடன் தொடர்புகொண்டு இது பற்றி வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவுகையில் விண்ணப்பதாரர்கள் தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரது முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பனவற்றினை சரியாக குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பதாரர் கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின், மேலே குறிப்பிட்ட விடயங்களுடன் தொலைநகல் (பெக்ஸ்) மூலம் பரீட்சைக்கான அனுமதி அட்டையின் பிரதியொன்றினை துரிதமாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் விண்ணப்பதாரரது தொலைநகல் இலக்கத்தினையும் குறிப்பிட்டு, கோரிக்கை கடிதமொன்றினை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு (பெக்ஸ்) அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு விசாரிக்கையில் பரீட்சை திணைக்களத்தினால் கோரப்படுகின்ற ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக பரீட்சார்த்தி தம்வசம் வைத்திருக்கும் விண்ணப்ப படிவத்தின் பிரதி, பரீட்சைக்கட்டணத்தினை செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி என்பனவற்றினையும் தயாராக வைத்திருப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

(II) **பரீட்சைக்கு அனுமதித்தல்** - பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் பரீட்சை அனுமதிப்பத்திரத்திலுள்ள தமது கையொப்பத்தினை உறுதிசெய்தல் வேண்டும் என்பதுடன், உரிய பரீட்சை நிலையத்திலும் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற முதற் தினத்திலேயே தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை பரீட்சார்த்திகள் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்களிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு கையொப்பத்தினை உறுதிப்படுத்த தவறும் விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது. இந்த வர்த்தமானி அறிவுத்தலில் பகுதி I (II அ) பந்தியில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையின் பதவிகளுக்கு நியமிக்கும் போது ஏற்புடையதான பொது நிபந்தனைகள் இதற்கும் ஏற்புடையதாகக் கருதப்படும். அவற்றினை விண்ணப்பதாரர்கள் கட்டாயமாகப் பின்பற்றுதல் வேண்டும்.

(III) பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். இந்த சட்டதிட்டங்கள் மீறப்படுமிடத்து, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற தண்டணைகளுக்கு பரீட்சார்த்திகள் ஆளாக நேரிடலாம்.

**குறிப்பு - 7** பரீட்சைக்கான அனுமதி அட்டையினை வழங்குவதானது, விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் என்பதற்கான ஏற்றுக்கொள்ளத்தக்க சான்றாக கருதுதல் ஆகாது.

09. **ஆளடையாளம்:** பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்குமாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர்கள் திருப்தியுறும் வகையில் தமது சுய ஆள் அடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்றினை அவர்கள் சமர்ப்பிக்கலாம்.

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு;

(iii) செல்லுபடியான வாகன சாரதி அனுமதிப் பத்திரம்.

மேற்கூறப்பட்ட ஆவணமொன்றினை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது. அவ்வாறே, விண்ணப்பதாரர்கள் தமது ஆளடையாளத்தினை உறுதிப் படுத்துவதற்கு முடியுமான வகையில் முகங்களையும் காதுகளையும் திறந்த நிலையில் பரீட்சை நிலையத்தினுள் நுளைய வேண்டும். அவ்வாறே, தமது ஆள் அடையாளத்தை நிரூபிக்க மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை நிலையத்தினுள் நுளைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை நிலையத்தினுள் நுழைந்தது முதல் பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரையில் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்களுக்கு விண்ணப்பதாரர்களை ஆள் அடையாளம் காணும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் திறந்த நிலையில் வைத்திருத்தல் வேண்டும்

10. **தகைமைச் சான்றிதழ்கள் :**

(i) அனைத்து வேண்டப்பட்ட விபரங்கள் அனைத்தையும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். இவ்வாறு தேவையான தகவல்களைக் கொண்டு முழுமைப்படுத்தப்படாத விண்ணப்படிவங்கள் நிராகரிக்கப்படலாம்;

(ii) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்கு தகுதிபெறுகின்ற விண்ணப்பதாரர்கள் ஆவணச் சான்றிதழ்களை சமர்ப்பித்து, தமது சுய தகைமையினை நிரூபித்தல் வேண்டும்;

(iii) நேர்முகப் பரீட்சையின் போது பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகள் அவசியமாகும்.

(அ) **பொறுப்புவாய்ந்த ஆளொருவரினால் ஒப்பமிடப்பட்ட குணநலச் சான்றிதழ்.**

**குறிப்பு - 8** குறித்த குணநலச் சான்றிதழானது சமாதான நீதவான், வழக்கறிஞர், பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதேச செயலாளர் அல்லது அரசாங்க பதவியொன்றில் பதவிநிலைத் தரத்திலுள்ள நிரந்தர அலுவலர் அல்லது

பொதுவாக நன்கு பிரபல்யமான, நேரடியாக தகவல்கள் குறிப்பிடப்பட்டு பெற்றுக் கொள்ளமுடியுமானவர்கள் எவரிடமிருந்தும் பெறலாம். குணநலச் சான்றிதழினை வழங்கும் நபரது பதவிப் பெயர், பெயர், முகவரி என்பன அதில் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். (அரசாங்க சேவையில் நிரந்தர பதவியொன்றினை வகிக்கும் விண்ணப்பதாரர்கள் குணநல சான்றிதழ்களை சமர்ப்பிப்பதற்கு அவசியமாகாது.)

(ஆ) விண்ணப்பதாரரின் பிறப்பினைப் பதிவுசெய்வதற்கான அத்தாட்சிப் பத்திரத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி அல்லது (பிறப்பு பதிவுசெய்யப்படாத விண்ணப்பதார்களாயின்) பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட வயது தொடர்பிலான விசேட சான்றிதழ்

**குறிப்பு 9 -**

I. பாடசாலைப் பாவனைக்காக அல்லது கல்வித் தேவைகளுக்காக வழங்கப்பட்ட விசேட பிறப்புச் சான்றிதழ் அல்லது பிறப்புப் பதிவிலிருந்து பெறப்பட்ட சான்றுபடுத்தப்பட்ட பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

II. பிறப்புச் சான்றிதழ்களுக்குப் பதிலாக சத்தியக் கடதாசி அல்லது ஞானஸ்நான சான்றிதழ்களோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பரீட்சார்த்தி சாதாரணமாக பயன்படுத்தும் பெயர் அல்லது பெயர்களிலிருந்து பிறப்புச்சான்றிதழிலுள்ள பெயர் அல்லது பெயர்கள் வேறுபடின் அல்லது பரீட்சைக்கு விண்ணப்பதாரி தோற்றும் பெயர் வேறுபடின் பிறப்புகள், இறப்புகள் பதிவுச் சட்டத்தின் (அத்தியாயம் 110) 27ஆம் மற்றும் 28ஆம் பிரிவுகளின் நியதிகளுக்கு அமைய பிறப்புப்பதிவிலுள்ள பெயரைத் திருத்துவதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படல் வேண்டும்.

III. இலங்கைப் பிரசை என்ற பதிவுச்சான்றிதழ் அல்லது வம்சாவளிப் பிரசாவுரிமைக்கான கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை எடுத்துக்காட்டுவதற்கான ஆவணம். (ஏற்புடையதாயின்)

IV. கல்வித்தகைமைகள் பற்றிய மூலச் சான்றிதழ்கள் அல்லது அத்தகைய சான்றிதழ்கள் வழங்கப்படாதவிடத்து, அதனோடு தொடர்புபற்ற ஏனைய உத்தியோகபூர்வ ஆவணங்கள். அதாவது, விண்ணப்பதாரர் பட்டப் பரீட்சையில் சித்திபெற்றுள்ளார் என்று பல்கலைக்கழக பதிவாளர் ஒருவரினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ கடிதம் மற்றும் பரீட்சைத் திணைக்களத்தினால் (கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண தரப்) பரீட்சையில் ஆங்கில மொழில் திறமைச் சித்தி அல்லது (கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் உயர்தரப்) பரீட்சையில் ஆங்கில மொழிக்காக விண்ணப்பதாரர் சாதாரண சித்தியினைப் பெற்றுள்ளார் என்று குறிப்பிட்டு வழங்கப்பட்ட பரீட்சைப் பெறுபேற்றுத் தாள்.

V. தேசிய மட்டத்தில் அல்லது இலங்கை நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தி சர்வதேச ரீதியான விளையாட்டு போட்டிகளில் காட்டிய திறமை தொடர்பில் பெற்றுக்கொண்ட ஆவணச் சான்றிதழ்.

VI. விண்ணப்பப் படிவத்தினை சமர்ப்பிக்கையில் அதற்குத் தேவையான சகல ஆவணங்களையும் தயாராக வைத்திருக்கும் படி பரீட்சார்த்திகள் வேண்டப்படுகின்றனர். மேலும் வேண்டப்படுகையில் தேவையான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற அல்லது தேவையான சந்தர்ப்பத்தில் அவற்றை சமர்ப்பிப்பதற்குத் தாமதிக்கின்ற விண்ணப்பதரர்கள் இப்பதவிக்கான நியமனத்திற்கு தகுதியற்றவர்களாக கருதப்படுவர்.

11. **போலியான தகவல்களை சமர்ப்பித்தல்.-**

பரீட்சைக்கான சட்டதிட்டங்களுக்கு அமைய, எவரேனும் விண்ணப்பதாரர் ஒருவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியற்றவர் என பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ அல்லது எச்சந்தர்ப்பத்திலும் தெரியவருமிடத்து, அவரது பரீட்சார்த்த உரிமையினை இரத்துச்செய்யப்பட முடியும். விண்ணப்பதாரர் சமர்ப்பித்துள்ள எவையேனும் விபரங்கள் அவரது அறிவுக்கு எட்டிய வரையில் பொய்யானவை என்று அல்லது எவையேனும் முக்கிய விபரங்களை வேண்டுமென்றே மறைத்து போலியான விபரங்களை வழங்கியுள்ளார் எனக் கண்டறியப்படுமிடத்து அல்லது அவரது சேவைக்காலத்தின் எக்காலப்பகுதியிலேனும் அவர் பரீட்சைக்குத் தோற்றும் வாய்ப்பினை இழந்தவர்என நிரூபிக்கப்படும் பட்சத்தில், அவர் உடனடியாக சேவையிலிருந்து பணிநீக்கம் செய்யப்படுவார். இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளை உரிய முறையில் பூர்த்தி செய்திராதுள்ள விண்ணப்பதாரர்களின் பரீட்சார்த்த உரிமையும் நிராகரிக்கப்படும்.

12. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத வேறு விடயங்கள் தொடர்பில் நிதி,பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் தற்றுணிவின் பிரகாரம் தீர்மானிக்கப்படுகின்றது.

13. இங்கு, சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலமொழிகளில் பிரசுரிக்கப்படுகின்ற அறிவித்தல்களில் மொழிகளுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை பற்றி தெரியவருமிடத்து, அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழியில் வெளியிடப்பட்ட அறிவித்தலே மேலோங்கிக் காணப்படும்.

சுங்கப் பணிப்பாளர் நாயகம்.

இலங்கை சுங்கத் திணைக்களம்.
“சுங்க இல்லம்”,
இல. 40, பிரதான வீதி,
கொழும்பு 11.

09-446

## நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

இலங்கைச் சுங்கத் திணைக்களம்

**இலங்கை சுங்கத் திணைக்களத்தின் சுங்கப் பரிசோதகர் தரம் II பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2023**

இலங்கைச் சுங்கத்திணைக்களத்தின் சுங்க பரிசோதகர் தரம் II பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தகுதிபெற்றுள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதோடு, விண்ணப்பங்களை நிகழ்நிலையில் (Online) மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான இறுதித் திகதி 2023.10.16 ஆகும்.

***குறிப்பு 1*** - நிகழ்நிலையில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதானது 2023.09.22 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பமாகி 2023.10.16 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணியுடன் முடிவடையும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் முதல் மூன்று நாட்களுக்கு (3) விண்ணப்பப்படிவங்களில் தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கான வசதிகளும் விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. முழுமைபெறாத விண்ணப்பப் படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் சுங்க பரிசோதகர் தரம் II பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த பரீட்சையானது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்தில் நாடுபூராகவும் அமைந்துள்ள, கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரதான நகரங்களில் மாத்திரம் நடாத்தப்படவுள்ளது. பரீட்சை நடைபெறும் திகதியானது எதிர் காலத்தில் பத்திரிகை அறிவித்தல்கள் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சையினை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினைச் சார்ந்துள்ளது.

**பரீட்சை நிலையங்கள் அமையப் பெறவுள்ள நகரங்கள் மற்றும் நகர இலக்கங்கள்**

| மாகாணம் | நகரம் | நகர இல. |
|---|---|---|
| மேல் | கொழும்பு | 01 |
| | கம்பஹா | 02 |
| | களுத்துறை | 03 |
| மத்திய | கண்டி | 04 |
| | மாத்தளை | 05 |
| | நுவரெலியா | 06 |
| தென் | காலி | 07 |
| | மாத்தறை | 08 |
| | அம்பாந்தோட்டை | 09 |
| வடக்கு | யாழ்ப்பாணம் | 10 |
| | மன்னார் | 11 |
| | வவுனியா | 12 |
| | முல்லைத்தீவு | 13 |
| | கிளிநொச்சி | 14 |
| கிழக்கு | மட்டக்களப்பு | 15 |
| | அம்பாறை | 16 |
| | திருகோணமலை | 17 |
| வடமேல் | குருநாகல் | 18 |
| | புத்தளம் | 19 |
| வடமத்தி | அநுராதபுரம் | 20 |
| | பொலன்நறுவை | 21 |
| ஊவா | பதுள்ளை | 22 |
| | மொணராகலை | 23 |
| சப்பிரகமுவ | இரத்தினபுரி | 24 |
| | கேகாலை | 25 |

ஏதேனும் நகரமொன்றில் பரீட்சை நிலையமொன்றை அமைப்பதற்கு போதுமானளவில் பரீட்சார்த்திகள் விண்ணப்பித்திருக்காவிடின், அவர்களின் இரண்டாவது விருப்பத் தேர்வில் குறிப்பிடப்பட்டுள்ள நகரத்தில் அல்லது அதனை அண்மித்த மற்றுமொரு நகரத்தில் அமைக்கப்படுகின்ற பரீட்சை நிலையத்துடன் பரீட்சார்த்திகள் தொடர்புபடுத்தப்படுவர். அத்துடன் உத்தேச நகரங்கள் அனைத்திலும் அல்லது அதிக எண்ணிக்கையில் அல்லது பரீட்சை நிலையத்தைத் தாபிப்பதற்காக போதுமான அளவு பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்காதவிடத்து, பரீட்சையினை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் நடவடிக்கை எடுப்பார். பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பித்த நகரத்தினை பரீட்சார்த்திகளின் தேவைக்கேற்ப பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக்கொண்டுள்ள இரு பாலாரிடமிருந்தும் இப்பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. **தகைமைகள்:**

I. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தாம் :

(அ) இலங்கைப் பிரசையாகவும்;
(ஆ) மிகச் சிறந்த ஒழுக்கமுடையவராகவும்;
(இ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18வயதுக்கு குறையாதவராகவும் 24 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல். இதற்கான தகுந்த சான்றிதழ்களையும் சமர்ப்பித்தல் வேண்டும். (அதற்கமைய, வயது தொடர்பான தகைமை பூர்த்தி செய்யப்படுவது விண்ணப்பதாரி 2005.10.16 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரும் 1999.10.16 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னரும் பிறந்திருத்தல் வேண்டும்)

***குறிப்பு2:*** ஏதேனும் சமயப் பிரிவொன்றில் மதகுரு அந்தஸ்திலிலுள்ள எந்தவொரு நபருக்கும் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

II. உடற் தகைமை: ஆண்களின் விடயத்தில் அவர்களுடைய உயரமானது 5 அடி 5 அங்குலங்களுக்கு குறையாமலும், மார்புச் சுற்றளவு (விரிவடைந்த நிலையில்)33 அங்குலங்களுக்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.

பெண்களின் விடயத்தில் அவர்களுடைய உயரமானது 5 அடி 3 அங்குலுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

III. கல்வித் தகைமைகள்: -விண்ணப்பதாரிகள் பின்வரும் கல்வித் தகைமைகளை உடையவர்களாக இருத்தல் வேண்டும்:

(அ) கல்விப் பொதுத்தராதரப்பத்திர(உயர் தரப்)பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று பிராதன பாடங்களில் சித்தி பெற்றிருத்தல், அத்துடன்

(ஆ) கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தர) சான்றிதழ் பரீட்சையில் இரு தடவைகளில் பிரதான பாடங்களான சிங்கள மொழி அல்லது தமிழ் மற்றும் கணிதம் அடங்கலாக ஐந்து பாடங்களில் திறமைச் சித்தியும் ஆங்கில மொழியில் சாதாரண சித்தி அடங்கலாக ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

03. **சேவை நிபந்தனைகள்:**

(I) இப்பதவிக்கான திரட்டிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு:

பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, சம்பள அளவுத் திட்டம் RS – 1 என்ற சம்பளத் தொகுதியில் ரூபா 29,540.00 - 300 × 7 -370 × 27 = 41,630.00 ஆகும்.

(II) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியக் கொடுப்பனவுத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள கொள்கைத் தீர்மானங்களுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

(III) சித்திபெற்று தெரிவாகும் பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டு காலப்பகுதிக்கு தகுதிகாண் நிலையில் வைக்கப்பட்டு நியமனம் வழங்கப்படுவர்.

(IV) நியமனம் பெற்றவர்கள் நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றக் கூடிய உடற் தகுதினை உடையவர்களா என்பதனைப் பரீட்சிப்பதற்காக அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரினால் நடாத்தப்படும் மருத்துவப் பரீட்சைக்கு உட்படுதல் வேண்டும்.

(V) நியமனம் பெற்றவர்கள் இரவிலும் பகலிலும் சேவை செய்வதற்கு நேரிடலாம்.அவ்வாறே அவர்கள் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பிணிக்கப்பட்டுள்ளனர்.

(VI) அரசாங்க வர்த்தமானி அறிவித்தலின் பகுதி I இன் (II அ)ஆம் பிரிவின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகள் மீது தெரிவு செய்யப்படும் பரீட்சாத்திகளின் கவனம்கோரப்படுகின்றது.

04. பரீட்சைத் திட்டம்–

ஆட்சேர்ப்புக்கான பரீட்சையானதுபின்வரும் மூன்று(03)வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும் :

| | |
|---|---|
| (1) பொது உளச்சார்பு (01 மணித்தியாலம்) | 100 புள்ளிகள் |
| (2) கணிதம் (01 மணித்தியாலம்) | 100 புள்ளிகள் |
| (3) ஆங்கிலமொழி (1 1/2 மணித்தியாலம்) | 100 புள்ளிகள் |
| மொத்தம் | 300 புள்ளிகள் |

***பொது உளச்சார்பு வினாத்தாள்***-இவ்வினாத்தாளானது விண்ணப்பதாரிகளின் மொழித்தேர்ச்சி மற்றும் தர்க்க அறிவினை அறவிடும் வகையில் தயாரிக்கப்பட்டதாகும். இவ்வினாத்தாளானது ஐம்பது (50) பல்தேர்வு வினாக்கள் மற்றும் சுருக்கமாக விடையளிக்கும் வகையிலான வினாக்களைக் கொண்டிருக்கும். அதற்கமைய, விண்ணப்பதாரர்கள் சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

***கணிதம்***- இவ்வினாத்தாளானது விண்ணப்பதாரிகளின் கணித அறிவினை பரிசோதிப்பதற்கான வினாக்களைக் கொண்டிருக்கும். இதிலுள்ள சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.இது கட்மைப்பு மாதிரியான வினாக்களைக் கொண்டிருக்கும்.

***ஆங்கில மொழி வினாத்தாள்***-விண்ணப்பதாரிகளது வாசிப்பு, எழுத்து, கிரகித்தல் மற்றும் தொடர்பாடல் திறன்களை பரிசோதிப்பதற்காக தயாரிக்கப்பட்டதாக இருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

***குறிப்பு - 3*** இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும். பரீட்சையில் தோற்றுவதற்கு இந்த அறிவித்தலின் பந்தி 02 (iii) இல் குறிப்பிடப்பட்ட தகைமைப் பரீட்சையில் சித்திபெற்ற மொழியிலேயோ (அதாவது சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம் மொழிகளில்) விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். ஆயினும், தகைமை பரீட்சைக்கு தமிழ் அல்லது ஆங்கில மொழியில் தோற்றி சித்தியடைந்துள்ள விண்ணப்பதாரிகள் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழியில் கல்வி கற்றுள்ள விண்ணப்பதாரர் ஒருவர் தாம் விரும்பின், சிங்கள மொழியில் இப்பரீட்சைக்கு தோற்றலாம். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு கொடுத்த பரீட்சை மொழியை பின்னர் மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

(i) தெளிவற்ற எழுத்துக்கும் எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும்.

(ii) பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறுவதானது, அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்குத் தேவையான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்று கருதப்படலாகாது. பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் கட்டுப்படுதல் வேண்டும். அத்தகைய சட்டதிட்டங்கள் மீறப்படுமிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற தண்டனைகளுக்கும் விண்ணப்பதாரிகள் ஆளாக நேரிடலாம்.

(iii) மதிப்பிடுகை: போட்டிப் பரீட்சையில் ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் சித்தியடைவதற்காக பெறவேண்டியுள்ள ஆகக் குறைந்த புள்ளிகள் 60% ஆகும். அவ்வாறு புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டு, அவர்கள் பெற்றுள்ள மொத்தப் புள்ளிகளுக்கு அமைய, தற்போதுள்ள வெற்றிடங்களை விட இரண்டு மடங்கிலான விண்ணப்பதாரிகளின் பெயர்களை விண்ணப்பதாரிகளின் பரீட்சை சுட்டிலக்க ஒழுங்கு வரிசை அல்லது அகராதி ஒழுங்குவரிசைக்கு அமைய ஆவணமொன்றினைத் தயாரித்து சுங்கப் பணிப்பாளர் நாயகம், இலங்கைச் சுங்கத் திணைக்களத்திற்கு பெற்றுக்கொடுக்கும். அதற்கமைய, குறித்த ஆவணத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளின் தகைமையினை மதிப்பிடுவதற்காக கட்டமைப்பு வடிவிலான நேர்முகப்

பரீட்சையொன்றிற்கு அழைக்கப்படுவர். இதில் விளையாட்டுத் திறமைகளுக்காக 10 புள்ளிகள் வழங்கப்படுவதோடு, பரீட்சையில் பெறப்பட்ட புள்ளிகள் மற்றும் கட்டமைப்பு வடிவிலான நேர்முகப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் மாத்திரம் ஆட்சேர்ப்பின் போது கவனத்திற் கொள்ளப்படும் என்பதுடன் கட்டமைப்பு வடிவிலான நேர்முகப் பரீட்சையில் விளையாட்டு திறன்களுக்கான விரிவான புள்ளி வழங்கல் திட்டமானது நியமன அதிகாரியினால் அங்கீகரிக்கப்படும்.

05. **தெரிவுமுறை அடிப்படை**– எழுத்துப் பரீட்சையிலும் கட்டமைப்பு வடிவிலான நேர்முகப்பரீட்சையிலும் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களை ஆட்சேர்க்கும் வகையில் நிதி, பொருளாதார உறுதிப்பாடுகள் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய நியமனங்களை வழங்குவதற்காக தெரிவு செய்யப்படுவதோடு, மொத்தப் பதவி வெற்றிடங்களில் 10% இற்கு மேற்படாத வெற்றிடங்கள் பெண் விண்ணப்பதாரிகளுக்கு ஒதுக்கி வைக்கப்படும்.

(i) **பெறுபேறுகளை வெளியிடல்**.- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சைக்குத் தகுதிபெற்ற விண்ணப்பதாரியின் எழுத்துப் பரீட்சைப் புள்ளிகள் மற்றும் நேர்முகப் பரீட்சைப் புள்ளிகள் என்பனவற்றை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்ததன் பின்னர், எழுத்துப் பரீட்சைப் புள்ளிகள் மற்றும் நேர்முகப் பரீட்சைப் புள்ளிகள் என்பனவற்றினை ஒன்றுதிரட்டி மொத்தப் புள்ளிகளைப் பெற்று, இறுதி முன்னுரிமைப் பட்டியலினை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் தயாரித்து சுங்கப் பணிப்பாளர் நாயகம், இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்கும். முன்னுரிமைப் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டதும், சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்குப் பொருத்தமானதொரு திகதியினைக் குறிப்பிட்டு அனுப்பியதன் பின்னர், எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் பெறப்பட்ட புள்ளிகள்/ மொத்தப் புள்ளிகள் குறிப்பிடப்பட்டு, பெறுபேற்றுக் குறிப்பொன்றினை பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அனுப்புவதற்கு அல்லது www.results.examinations.gov.lk என்ற இணைய தளத்தில் வெளியிடுவதற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும்.

***குறிப்பு*** – ***4*** சுங்கத் திணைக்களப் பணிகளின் தன்மைக்கு அமைய, பெண் அலுவலர்களும் சுழற்சி முறையில் இரவு நேர சுழற்சி முறைப் பணிகளிலும் சேவையாற்ற நேரிடலாம்.

06. விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் பதவியோடு தொடர்புபற்ற அனைத்து தகைமைகளையும் பரீட்சைக்கான விண்ணப்பப்பங்கள் கையேற்கப்படும் இறுதித் தினத்திற்கு முன்னர் பூர்த்தி செய்திருப்பது கட்டாயமானதாகும்.

(I) பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சாத்திகள் கட்டுப்படுதல் வேண்டும். இந்த சட்டதிட்டங்களை மீறுமிடத்து, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைகளுக்கும் குறித்த பரீட்சார்த்திகள் ஆளாகலாம்.

07. **விண்ணப்பிக்கும் முறை**:

(i) நிகழ்நிலை (Online) வழியான விண்ணப்பப்படிவங்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் பூரணப்படுத்தல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலை வழியாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் செல்லுபடியான விண்ணப்பப்படிவம் என திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது /ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது குறித்து வலையமைப்பிற்கு நுழைவதற்காக பயன்படுத்தப்பட்ட செல்லிட தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தியொன்றின் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (E-mail) மூலம் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை வழியில் விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பது எவ்வாறு என்பது குறித்து ஏற்படுத்தப்பட்டுள்ள பொது வழிகாட்டுதல்களை (Common Instructions) விண்ணப்பதாரர்கள் பதிவிறக்கம் செய்துகொள்ளவும். விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்கையில் இந்த வழிகாட்டுதல்கள் கட்டாயமாகப் பின்பற்றவும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் யாவும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

அரசாங்க சேவையில்/கூட்டுத்தாபனங்கள்/ நியதிச் சட்ட சபைகளில் தற்போது பணியாற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் நிறுவனத் தலைவரின் உடன்பாட்டினைப் பெற்றதன் பின்னர் இப் பரீட்சைக்காக விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து கட்டமைப்பு வடிவிலான நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுகையில், விண்ணப்பதாரர்கள் தற்போது வகிக்கின்ற சேவையிலிருந்து/பதவியிலிருந்து விடுவிக்கப்பட முடியும் என நிறுவனத் தவைவரினால் சான்றுபடுத்தப்பட்ட கடிதமொன்றினை கட்டமைப்பு வடிவிலான நேர்முகப் பரீட்சைச் சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்துகையில், நிகழ்நிலை வழியாக வழங்கப்படுகின்ற பின்வரும் கட்டணக் கொடுப்பனவு முறைகளின் கீழ் மாத்திரம் கொடுப்பனவினை மேற்கொள்ளுதல் வேண்டும்:

(i) ஏதேனும் வங்கியொன்றின் கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card) ;

(ii) நிகழ்நிலையில் கொடுப்பனவு வசதிகள் செயலாக்கம் செய்யப்பட்ட பற்று அட்டை (Debit Card with Online Payment Facility) ;

(iii) இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கியிடல் முறைமை மூலம் (Online Banking Method, Bank of Ceylon);

(iv) ஏதேனும் இலங்கை வங்கிக்கிளையொன்றின் மூலம் (Slip Payment Bank of Ceylon).

**குறிப்பு - 5** நிகழ்நிலையில் கொடுப்பனவு செய்வது தொடர்பிலான வழிகாட்டல்கள் பரீட்சைகள் தொடர்பான தொழில்நுட்ப வழிகாட்டல்களின் கீழ் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

(iii) கட்டணம் கிடைக்கப்பெற்றது தொடர்பாக குறுஞ்செய்தியொன்றின் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்தினை முழுமையாக செலுத்துதல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்ணைத்தினைக் குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறித்த கட்டண முறையின் கீழ் பரீட்சைக் கட்டணத்தை செலுத்துவதில் ஏற்படும் தாமதங்களுக்கு பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்காது. நிகழ்நிலையில் கொடுப்பனவு செய்வது தொடர்பான வழிகாட்டல்கள் இணையதளத்தில் பரீட்சைகள் தொடர்பான தொழில்நுட்ப வழிகாட்டல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(iv) பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளளிப்புச் செய்யப்படவோ அல்லது வேறொரு பரீட்சைக்கு மாற்றீடு செய்யவதற்கோ இடமளிக்கப்படமாட்டாது.

(v) பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அரசாங்க சேவையில் / மாகாண அரசாங்க சேவையில்/ அரசாங்க நிறுவனமொன்றில்/ அரசாங்க கூட்டுத் தாபனமொன்றில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரர், தனது கையொப்பத்தினை நிறுவனத் தலைவரினால் அல்லது அவர் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினாலும், அவ்வாறல்லாத விண்ணப்பதாரர் ஒருவர் தனது கையொப்பத்தினை அரசாங்க பாடசாலையின் அதிபர் அல்லது ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர், பிரிவின் கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் ஆணைபெற்ற உத்தியோகத்தர், அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தப் பதவியினை வகிக்கின்ற பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதியினால் அல்லது தலைமை பிக்குவினால் அல்லது ஏனைய சமயங்களின் சமய ஸ்தானங்களுக்குப் பொறுப்பான அல்லது சமயத் தலைவர்களுக்கு மத்தியில் குறிப்பிடத்தக்க தலைவர்களாக கருதக் கூடிய நிலையிலுள்ள பதவியொன்றினை வகிக்கின்ற ஒருவரினால் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

***குறிப்பு- 6*** அனுமதி அட்டையின்றி பரீட்சை நிலையத்தினுள் நுழைவதற்கு விண்ணப்பதாரர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். பரீட்சைக்குத் தோற்றுகின்ற முதற் தினத்திலேயே விண்ணப்பதாரர்கள் தமது கையொப்பம் உறுதிப் படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை மாத்திரம் பரீட்சை நிலைய பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைக்கான அனுமதிஅட்டை வழங்கப்படுவதானது, அவர்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அல்லது குறித்த பதவிக்கு பூரண தகுதியினைப் பெற்றுள்ளார் என்பதற்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றாக கருதப்படலாகாது.

08. **பரீட்சைக்கான அனுமதி அட்டை** :

வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் இப்பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க மதிப்பீட்டின் பேரில், விண்ணப்பங்கள் கையேற்கப்படும் இறுதித் திகதியன்று அல்லது அத்தினத்திற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி, விண்ணப்பப்படிவத்தினை முறையாக நிகழ்நிலையில் சமர்ப்பித்து அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன், அது குறித்து பரீட்சைத் திணைக்களம் அறிவித்தல் ஒன்றினை பத்திரிகையிலும் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணைய தளத்திலும் வெளியிடும். அறிவித்தல் வெளியிடப்பட்ட 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் தமக்கு அனுமதி அட்டைகள்

கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் இருப்பின், அவர்கள், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அது தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சைகள் ஏற்பாட்டுக் கிளையில் வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவுகையில் விண்ணப்பதாரர்கள் தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர்,விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பனவற்றினை சரியாக குறிப்பிடுதல் வேண்டும்.

(I) கொழும்புக்கு வெளியே வசிக்கின்ற விண்ணப்பதாரராயின், மேலே குறிப்பிட்ட விடயங்களுடன் அனுமதி அட்டையின் பிரதியொன்றினை அனுப்ப முடியுமான தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்துடன் கோரிக்கை கடித மொன்றினையும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு சமர்ப்பித்து விசாரிப்பதானது பயனுள்ளதாக அமையும். இதன்போது பரீட்சைகள் திணைக்களத்தினால் கோரப்படுகின்ற ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு விண்ணப்பதாரர்கள் தாம் வைத்துள்ள பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி என்பனவற்றினையும் தயாராக வைத்திருப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

***குறிப்பு - 7*** பரீட்சை அனுமதி அட்டையை வழங்குவதானது, விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றாக அதனைக் கருத்திற்கொள்ளலாகாது.

09. **ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்குமாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர்கள் திருப்தியுறும் வகையில் தமது சுய ஆளடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்றினை அவர்கள் சமர்ப்பிக்கலாம்:

(i) தேசிய ஆளடையாள அட்டை;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியான இலங்கை வாகன சாரதி அனுமதிப் பத்திரம்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஆவணமொன்றினை சமர்ப்பிக்கத்தவறும் விண்ணப்பதார் ஒருவரின் பரீட்சார்த்த உரிமையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிவின் பேரில் நிராகரிக்கப்படலாம்.

அவ்வாறே, விண்ணப்பதாரர்கள் தமது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு முடியுமான வகையில் முகங்களையும் காதுகளையும் திறந்த நிலையில் பரீட்சை நிலையத்தினுள் நுளைய வேண்டும். அவ்வாறே, தமது ஆள் அடையாளத்தை நிரூபிக்க மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை நிலையத்தினுள் நுளைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை நிலையத்தினுள் நுழைந்தது முதல்,பரீட்சை முடிந்து நிலையத்தை விட்டு வெளியேறும் வரையில் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்களுக்கு விண்ணப்பதாரர்களை ஆள் அடையாளம் காணும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் திறந்த நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.

10. **தகைமைச் சான்றிதழ்கள்**:

(i) வேண்டப்பட்ட விபரங்களை விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். இவ்வாறு தேவையான தகவல்களைக் கொண்டு முழுமைப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படலாம்;
(ii) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்கு தகைமைபெறுகின்ற விண்ணப்பதாரர்கள் ஆவணச் சான்றிதழ்களை சமர்ப்பித்து, தமது சுய தகைமையினை நிரூபிக்க தயாராக இருத்தல் வேண்டும்;
(iii) நேர்முகப் பரீட்சையின் போது பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளை விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பொறுப்புவாய்ந்த ஆளொருவரினால் ஒப்பமிடப்பட்ட குணநலச் சான்றிதழ்.

***குறிப்பு - 8*** குறித்த குணநலச் சான்றிதழானது சமாதான நீதவான், வழக்கறிஞர், பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதேச செயலாளர் அல்லது அரசாங்க பதவியொன்றில் பதவி நிலைத் தரத்திலுள்ள நிரந்தர அலுவலர் அல்லது பொதுவாக நன்கு பிரபல்யமான, நேரடியாக தகவல்களைக் குறிப்பிடப்பட்டு பெற்றுக்கொள்ள முடியுமானவர்கள் எவரிடமிருந்தும் பெறலாம். குணநலச் சான்றிதழினை வழங்கும் நபரது பதவிப் பெயர், பெயர், முகவரி என்பன அதில் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவியொன்றினை வகிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு குணநல சான்றிதழ்களை சமர்ப்பிப்பதற்கு அவசியப்படமாட்டாது.

(ஆ) பரீட்சார்த்தியின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி அல்லது (பிறப்பு பதிவு செய்யப்படாத விண்ணப்பதாரர்களாயின்) பதிவாளர் நாயகத்தினால் வயது பற்றி வழங்கப்பட்ட விசேட சான்றிழ்.

*குறிப்பு - 9*

(i) பாடசாலை பாவனைக்காக அல்லது கல்வித் தேவைகளுக்காக வழங்கப்பட்ட விசேட பிறப்புச் சான்றிதழ் அல்லது பிறப்புப் பதிவிலிருந்து பெறப்பட்ட சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ii) பிறப்புச் சான்றிதழ்களுக்குப் பதிலாக சத்தியக் கடதாசி அல்லது ஞானஸ்நான சான்றிதழ்களோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பரீட்சார்த்தி சாதாரணமாக பயன்படுத்தும் பெயர் அல்லது பெயர்களிலிருந்து பிறப்புச் சான்றிதழிலுள்ள பெயர் அல்லது பெயர்கள் வேறுபடின் அல்லது பரீட்சைக்கு விண்ணப்பதாரி தோற்றும் பெயர் வேறுபடின் பிறப்புகள், இறப்புகள் பதிவுச் சட்டத்தின் (அத்தியாயம் 110) 27ஆம் மற்றும் 28 ஆம் பிரிவுகளின் நியதிகளுக்கு அமைய பிறப்புப் பதிவிலுள்ள பெயர்/பெயரைத் திருத்துவதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படல் வேண்டும்;

(iii) இலங்கைப் பிரசை என்ற பதிவுச் சான்றிதழ் அல்லது வம்சாவளிப் பிரசாவுரிமைக்கான கோரிக்கை தொடர்பில் அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வ கடிதத்தின் மூலப் பிரதி (ஏற்புடையதாயின்);

(iv) கல்வித் தகைமைகள் பற்றிய மூலச்சான்றிதழ்கள் அல்லது அத்தகைய சான்றிதழ்கள் வழங்கப்படாதவிடத்து அதனோடு தொடர்புபற்ற ஏனைய உத்தியோகபூர்வ ஆவணங்கள்;

(v) வலய/மாவட்ட/தேசிய மட்ட விளையாட்டு போட்டிகளில் காட்டப்பட்ட திறமை தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆவணச் சான்றிதழ்;

(vi) விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுகையில் அதற்குத் தேவையான சகல ஆவணங்களையும் தயாராக வைத்திருக்குமாறு விண்ணப்பதாரர்கள் வேண்டப்படுகின்றனர். தேவைக்கேற்ப ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற அல்லது தேவையான சந்தர்ப்பத்தில் ஆவணங்களை சமர்ப்பிப்பதற்குத் தாமதிக்கின்ற விண்ணப்பதாரர்கள் இப்பதவிக்கான நியமனத்திற்கு தகுதியற்றவர்களாக கருதப்படுவர்.

11. **போலியான தகவல்களை சமர்ப்பித்தல்** - இப்பரீட்சைக்கான சட்டதிட்டங்களுக்கு அமைய, எவரேனும் விண்ணப்பதாரரொருவர் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியற்றவர் என பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ அல்லது வேறு சந்தர்ப்பமொன்றின் போதோதெரியவருமிடத்து, குறித்த விண்ணப்பதாரரின் பரீட்சைக்கான பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்பலாம் என்பதோடு மாத்திரமல்லாது, விண்ணப்ப தாரர் சமர்ப்பித்துள்ள எவையேனும் தகவல்கள் அவரது அறிவுக்கு எட்டிய வரையில் பொய்யானவை அல்லது எவையேனும் முக்கிய தகவல்களை வேண்டுமென்றே மறைத்து போலியான தகவல்களை வழங்கியுள்ளார் எனக் கண்டறியப்படின் அல்லது அவரது சேவைக் காலத்தின் எக்காலப் பகுதியிலேனும் அவர் பரீட்சைக்குத் தோற்றும் வாய்ப்பினை இழந்தவர் என நிரூபிக்கப்படின், அவர் உடனடியாக சேவையிலிருந்து பணிநீக்கத்திற்கு உட்படுவார். அத்துடன், இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் உரிய முறையில் பூர்த்தி செய்திராத விண்ணப்பதாரர்களின் பரீட்சார்த்தி உரிமையும் இரத்துச் செய்யப்படலாம்.

12. இந்த சட்டதிட்டங்களில் குறிப்பிடப்படாத வேறு விடயங்கள் இருப்பின் அவை சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிவின் பிரகாரம் தீர்மானிக்கப்படலாம்.

13. இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்ற இந்த அறிவித்தலில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது பொருத்தப்பாடின்மைகள் பற்றி தெரியவருமிடத்து, இவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி அறிவித்தலே மேலோங்கிக் காணப்படும்.

சுங்கப் பணிப்பாளர் நாயகம்,

இலங்கை சுங்கத் திணைக்களம்,
"சுங்க இல்லம்",
இல. 40, பிரதான வீதி,
கொழும்பு 11.

09-449

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.